பொதுசன நூலகம்

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 28 திங்கட்கிழமை (12.01.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 024




## பொதுமக்கள் கொல்லப்படுவது ஆழ்ந்த கவலை தருகிறது

# இலங்கை அரசாங்கம் போரை நிறுத்தி தமிழர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்



## வத்திக்கானிலிருந்து பாப்பரசர் அவசர வேண்டுகோள்

(வத்திக்கான்)

இலங்கையில் நடைபெறும் யுத்தத்தினால் அப்பாவி தமிழ் மக்கள் கொல்லப்படுவது ஆழ்ந்த கவலை தருகிறது. இலங்கை அரசு உடனடியாக போரை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும். இவ்வாறு அவசர வேண்டுகோளை வத்திக்கானிலிருந்து பரிசுத்த பாப்பரசர் XVI-வது பெனடிக் விடுத்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடாநாடு முழுவதும் படையினர் வசம்

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

வடமராட்சிக் கரையோரங்கள் உட்பட யாழ்.குடாநாடு முழுமையாகப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

புதுவருட (12ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு பகுதியை நோக்கி 9 படையணிகள் முன் நகர்வு

### இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு பிரதேசத்தில் 9 இராணுவ அணிகள் முன்நகர்வு முயற்சியில் ஈடுபட்டுள்ளன. புலிகளின் இலக்குகள் மீது கடும் தாக்குதல்கள் நடத்தியவாறு முன்னேற்ற முயற்சி தொடர்கின்றது.

இதனால் முல்லைத்தீவு பகுதிக்குள் புலிகள் முடக்கப்பட்டுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு,விஸ்வமடு,தர்மபுரம் மற்றும் முல்லைத்தீவு (12ஆம் பக்கம் பார்க்க)

## கடந்த மூன்று மாதங்களில் 3 ஆயிரம் படையினர் பலி



### அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னிக்களமுனைகளில் கடந்த மூன்று மாதங்களில் படையினர் 3 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளதாக பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கொழும்பில் இருந்து வெளிவரும் ஐலன்ட் ஆங்கில வார ஏட்டுக்கு அவர் (12ஆம் பக்கம் பார்க்க)

### அன்பு மாணவர்களே!

க.பொ.த. உயர் தரத்தில் (2008) 3A,2AB எடுத்த மாணவர்களை, யாழ்.மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் வழமைபோல் இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து பாராட்டவுள்ளன என்ற செய்தியை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

## கிளிநொச்சியை அபிவிருத்தி செய்து மக்களை மீள்குடியமர்த்த அரசு திட்டம்

### ஜனாதிபதி செயலகத்தில் விசேட கலந்துரையாடல்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தினர் அண்மையில் கைப்பற்றிய கிளிநொச்சி மாவட்டத்தை துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கான திட்டமொன்றை இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷ கடந்த வெள்ளியன்று இதற்கென விசேட கலந்துரையாடலொன்றை ஜனாதிபதி செயலகத்தில் நடத்தினார்.

கிளிநொச்சியை துரிதமாக அபிவிருத்தி செய்வதன் மூலம் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியேற்றுவதற்கு ஊக்குவிப்பதே இந்த துரித அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கம் என்று அவர் தெரிவித்தார்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழக (புளொட்) தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழர் விடுதலைக் (12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கை விரைவில் முடிவுக்கு வரும்

# சர்வகட்சிக் குழுவின் யோசனையை அமுல்படுத்த சர்வஜன வாக்கெடுப்பு நடத்த அரசாங்கம் திட்டம்

(கொழும்பு)

சர்வகட்சிக் குழுவின் தீர்வு யோசனைத் திட்டத்தை அமுலாக்கம் செய்வது குறித்து சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அத்துடன் சர்வகட்சிக்குழு யோசனைத் திட்டத்தை அமுல்படுத்தும்போது அரசியல் சாசனத்தில் திருத்தங்களை மேற்கொள்ள நேரிடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் இராணுவ நடவடிக்கைகள் விரைவில் முடிபிற்குக் (12ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முதலாவது இருபது-20 போட்டியில்
# அறிமுக வீரர் வோர்னர் 'ரன்' மழை
# அவுஸ்திரேலிய அணி அபார வெற்றி



(மெல்போர்ன்)

அறிமுக வீரர் வோர்னரின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் அவுஸ்திரேலிய அணி 52 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணியை வீழ்த்தியது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 3 டெஸ்ட்,2 இருபது-20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள்கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்க அணி 2:1 என்ற கணக்கில் கைப்பற்றிய நிலையில் 2 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் முதலாவது போட்டி நேற்று மெல்போர்னில் நடைபெற்றது.

இந்த போட்டியில் தென்னாபிரிக்க அணித்தலைவர் சிமித் காயம் காரணமாக தொடரிலிருந்தே விலகியதால் அணித்தலைவராக போத்தர் செயற்படுகிறார்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி அறிமுக ஆரம்பத்துடுப்பாட்டவீரர் வோர்னரின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை யிழந்து 182 ஓட்டங்களை எடுத்தது.

இதில் தனது முதலாவது சர்வதேச இருபது-20 போட்டியில் விளையாடிய வோர்னர் 43 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு (7 பவுண்டரிகள்,6 சிக்ஸர்கள் அடங்கலாக) 89 ஓட்டங்களைக் குவித்தார்.

ஏனையோரில் அணித்தலைவர் பொன்டிங் 21 ஓட்டங்களை எடுத்தார். பந்து வீச்சில் ஸ்ரையன் 3 விக்கெட்டுக் களையும் நிற்னி, மோர்கல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக் களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 22 ஓவர்களில் 183 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 18 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 130 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 52 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் டுமினி 48 பந்துகளில் (9 பவுண்டரிகள்,ஒரு சிக்ஸர் அடங்கலாக) 78 ஓட்டங்களை எடுத்தார். ஏனையோரில் மோர்கல், ஜார் ஸ்வேல்ட் ஆகியோர் தலா 12 ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் டேவிட் ஹசி 3 விக்கெட்டுக் களையும் பிரக்கன்,தைட் மற்றும் ஹிலே பேன் ஹயூஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.

இப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த வோர்னர் தனது முதலாவது போட்டியிலேயே ஆட்டநாயகனானார்.

இவ் வெற்றியின் மூலம் 2 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் அவுஸ்திரேலிய அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

## ஒருநாள் அணிக்கும் ஸ்ரொரஸ் தலைவர்

இங்கிலாந்து டெஸ்ட் அணித்தலைவராக நியமிக்கப்பட்ட அன்ரூ ஸ்ரொரஸுக்கு கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.மேற்கிந்திய தொடருக்கான ஒருநாள் மற்றும் இருபது-20போட்டிகளுக்கும் இவர்தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

பயிற்சியாளருடன் ஏற்பட்டமோதலை தொடர்ந்து இங்கிலாந்து வீரர் கெவின் பீற்றர்சன் தலைமை பதவியை ராஜினாமா செய்தார்.

உடனடியாக இங்கிலாந்து அணியின் டெஸ்ட் தலைவராக அன்ரூ ஸ்ரொரஸ் நியமிக்கப்பட்டார்.இங்கிலாந்துஅணி எதிர்வரும் 25ஆம் திகதி மேற்கிந்தியதீவுகளுக்கு சென்று அங்கு 4டெஸ்ட்,5 ஒருநாள் மற்றும் ஒரு இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க உள்ளது.

டெஸ்ட் அணித்தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில் ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளுக்கு தலைவரை தேர்வு செய்ய இங்கிலாந்து தேர்வுக்குழு நேற்றுமுன்தினம் கூடியது. முடிவில் மேற்கிந்தியதீவுகளுக்கு எதிரான தொடர் முழுமைக்கும் ஸ்ரொரஸ் அணித்தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து தேர்வுக்குழு தலைவர் ஜைல் மில்லர் கூறுகையில்; மேற்கிந்திய தீவுகள்



தொடர் முழுமைக்கும் அன்ரூ ஸ்ரொரஸ் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். தொடர் முடிபடைந்த பின்அவரது செயற்பாடுகள் மதிப்பீடு செய்யப்படும் என்றார். கிரிக்கெட் சபையின் முடிபுக்கு ஸ்ரொரஸ் சம்மதம் தெரிவித்துள்ளார்.

## உலக சாதனை படைக்க மெண்டிஸ் இன்று களத்தில்

பங்களாதேஷில் நடைபெற்று வரும் முக்கோண ஒருநாள்தொடரில் இன்று இலங்கை அணி சிம்பாவேயுடன் மோதவுள்ளது.



மிர்பூரில் நடைபெறும்இந்த போட்டி இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் அஜந்த மெண்டிஸுக்கு முக்கியமான ஆட்டமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரை 18 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் விளையாடியுள்ள மெண்டிஸ் இன்றைய போட்டியில் இரண்டு விக்கெட்டுக் களை வீழ்த்தினால் ஒருநாள் அரங்கில் குறைந்த போட்டிகளில் 50ஆவது விக்கெட்டை அடைந்தவராக உலக சாதனை படைத்து விடுவார்.

தற்போது இந்த சாதனை இந்திய வேகப்பந்து வீச்சாளர் அஜித் அகார்கர் வசம் உள்ளது. அகார்கர் தனது 23ஆவது ஒருநாள் போட்டியி லேயே 50 விக்கெட்டுக்களை அடைந்து உலக சாதனை படைத்துள்ளார்.

## பாகிஸ்தான் தொடருக்கான இலங்கை அணி அறிவிப்பு

பாகிஸ்தான் சுற்றுப்பயணத்துக்கான இலங்கை ஒருநாள் போட்டி அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஜெயவர்த்தனா அணித்தலைவராகவும் சங்கக் காரா துணை அணித்தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜெயசூரியா உள்ளிட்ட வீரர்கள் இந்த அணியில் இடம் பெற்றுள்ளார்கள். கடந்த ஆகஸ்ட் மாதத்திற்குப் பின் ஒருநாள் அணியிலிருந்து நீக்கப்பட்ட டில்சான் மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார்.

அணிவிபரம் வருமாறு; மஹேல ஜெயவர்த்தனா (அணித் தலைவர்), சங்கக்காரா, சனத் ஜெயசூரியா, உபுல் தரங்க,சாமர கபுகெதர,ஜேகான் முகபாரக், திலகரட்னடில்சான், திலினகண்டாம்பி, முத்தையா முரளிதரன்,அஜந்த மெண்டிஸ், பர்வேஷ் மகரூப், டில்கார பெர்ணான்டோ, நுவான் குலசேகர, திலின துஷார மற்றும் அஞ்சலே மத்தியூஸ்.

---

## நிஷா அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான உதவிகள்

(நல்லூர்)

நிஷா வெள்ளப்புயல் அனர்த்தத்தினால் மிகவும் பாதிப்புக்குள்ளான வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்களின் பிள்ளைகளுக்கு சேமிப்பு புத்தகங்கள் , கற்றலுக்கான உபகரணங்களும் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நல்லூர் முருகன் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

நல்லூர் கிராம அலுவலர் திருமதி. இராகினி இராமலிங்கத்தின் சுயமுயற்சியால் இலங்கை வங்கி ஸ்ரான்லி வங்கிக்கிளை மூலம் சேமிப்புப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. கற்றலுக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன.

நல்லூர்பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் சேமிப்புப் புத்தகத்தை வழங்கி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

(6-134)

## மகரஜோதி தரிசனம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி விழைவேலி ஐயனார் ஆலய மண்டலபூர்த்தி விழாவும் மகரஜோதி தரிசனமும் நாளை மறுதினம் புதன்கிழமை மாலை 3 மணி தொடக்கம் 5மணிவரை இடம்பெறும்.

இந்நிகழ்வுகளை பிரதம சிவாச்சாரியார் கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் நிகழ்த்தி வைப்பார். (6-102)

## பாலர் பாடசாலைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 71 முன்பள்ளி பாலர் பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இவ்விளையாட்டு உபகரணங்கள் சோடிஸ் நிறுவனத்தினரால் பருத்தித்துறை கோட்டக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும்,

பாடசாலைப் பொறுப்பாசிரியர்கள் தகுந்த ஆதாரங்களுடன் இன்று திங்கட்கிழமை 12 மணிக்குப் பின்னர் கோட்டக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் பருத்தித்துறைக் கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன் தெரிவித்துள்ளார்.

(6-29-4)

## பளையில் கைதான 33 பொதுமக்களை நலன்புரி நிலையத்தில் சேர்க்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

பளை பிரதேசம் சோரன்பற்று பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை படையினரால் வீடுகளில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது 4சிறுவர்கள்,9 பெண்கள் உட்பட 33 பொதுமக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட அனைவரையும் படையினர் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். பின்னர் அவர்களை சாவகச்சேரி நீதிமன்றில் கொடிகாமம் பொலிஸார் ஆஜர்படுத்தினர்.

சாவகச்சேரி நீதவான் விசாரணையின் பின்னர் கொடிகாமம் பொலிஸாரிடம் 33 பொதுமக்களையும் யாழ்.போதனா வைத்திய சாலையில் மருத்துவ பரிசோதனை செய்யுமாறு உத்தரவிட்டதுடன் மருத்துவ பரிசோதனை முடிபடைந்தவுடன் அவர்களை கோப்பாயில் உள்ள நலன்புரி முகாமில் அரசாங்க அதிபரின் மேற்பார்வையுடன் சேர்க்குமாறும் உத்தரவிட்டார். (ந-5)

## கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள் விழா இன்று காலை 9.30மணிக்கு வித்தியாலய அதிபர் கு.ஜெகநாதன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அருணோதயாக் கல்லூரியின் ஓய்வுபெற்ற உப அதிபர் என்.பத்மநாதன் கலந்து கொள்வார். (ந)

★ ★ ★

(கோப்பாய்)

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் கால்கோள் விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் வித்தியாலய அதிபர் மு.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக உரும்பிராய் மக்கள் வங்கி முகாமையாளர் ப.கார்த்திகேசு கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ந-6,79)

★ ★ ★

பருத்தித்துறை சித்தி விநாயக வித்தியாலய தரம் 1 மாணவர்களின் கால்கோள் விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் அ.ச.அரியகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரி பா. இரகுநாதன் கலந்துசிறப்பிக்கவுள்ளார். (6-29-4)

## தென்மராட்சிப் பிரதேசத்தில் தெங்குப் பயிர்ச்செய்கையாளர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேசத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தில் மூழ்கிப் பல தென்னம்பிள்ளைகள் அழுகி அழிவுற்றதால் தென்மராட்சிப் பகுதி தெங்குப் பயிர் செய்கையாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

தென்னம்பிள்ளைகளை 100ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்து கூலி கொடுத்து நடுகைசெய்து பலவாரங்கள் நீர் இறைத்த நிலையில், வெள்ளம் மூழ்கியதால் அவை அழுகி அழிவடைந்துள்ளன.

சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் இவற்றைக் கவனத்தில் கொண்டு மீள் நடுகைக்கு உதவி புரிய வேண்டுமென தெங்குப் பயிர்ச் செய்கையாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

(6-29-4)

# இன்று ஒரு தகவல்

## நல்ல நண்பர்கள்

எனது நண்பர் ஒருவர் இருந்தார். எப்பொழுது பார்த்தாலும் கையில் ஒருபுத்தகத்தை வைத்திருப்பார்.

புத்தகமில்லாமல் எங்கேயும் போகமாட்டார்.

"எதற்கு இப்படி எடுத்துக்கொண்டு போகிறீர்கள்?" என்று கேட்டால்,

"எனக்கு இது ஒரு நண்பன் மாதிரி... இந்தக் காலத்தில் எங்கே போனாலும் காத்திருக்க வேண்டியிருக்கிறது. அந்த மாதிரி சமயத்தில் நான் இந்த நண்பனுடன் பேசிக் கொண்டிருப்பேன்" என்பார்.

ஒருவர் ஒரு பெரிய அரச பதவியில் இருந்தார். அந்தப் பதவியிலிருந்து இறங்க வேண்டிய சூழ் நிலை. அரசு கொடுத்திருந்த வீட்டை விட்டு வெளியே வந்தார். வரும் போது இரண்டு கையிலும் இரண்டு பெட்டியை எடுத்துக் கொண்டு வந்தார். "சேர்...உங்களுடைய உடைமைகள்எங்கே?" என்று கேட்கிறார்கள் அங்கிருந்த ஊழியர்கள். அவர் தன் கையிலுள்ள பெட்டியைக் காட்டி "இது தான் என்னுடைய சொத்து" என் கிறார்.

ஒருபெட்டியில் அவருடைய உடைகள், இன்னொருபெட்டியில் அவர் விரும்பிப் படிக்கும் புத்தகங்கள். அவ்வளவுதான்.

புத்தக வாசிப்பு உடம்புக்கு நல்லது என்கிறார்கள்.

ஒருவருக்கு இரத்த அழுத்தம் 140/80 என்று வைத்துக் கொள்வோம். அவரிடம் ஒரு புத்தகத்தை கொடுத்து படிக்கச் சொல்லி விட்டு கொஞ்ச நேரம் கழித்து இரத்த அழுத்தத்தை பரிசோதனை செய்து பார்த்தால்... அது குறைந்திருக்கும். என்று சொல்கிறார்கள்.

ஒரு நபர் ஓராண்டுக்குச் சராசரியாக இரண்டாயிரம் புத்தகங்களைப் படித்திருக்க வேண்டுமாம். இது "யுனெஸ்கோ" பரிந்துரை.

உலகின் முதலாவது நூலகத்தை கி.மு. 2500 ஆம் ஆண்டில் பாபிலோனியாவிலுள்ள 'அமில் அனு' என்ற அரசன் தான் உருவாக்கினான்.

அப்பொழுதெல்லாம் தாள் கிடையாது, களி மண் பலகைகளில் எழுதி அதைத் தொகுத்து நூலாக்கி அந்த நூலகத்தில் வைத்திருந்தார்களாம். அரசரின் நூலகத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் இருந்ததாக வரலாற்றுக் குறிப்பு தெரிவிக்கிறது. அது மட்டுமல்ல...அந்த நூலகத்தில் பொருள் வாரியாக(Subject) புத்தகங்களை வகைப்படுத்தி வைத்திருந்தார்களாம்.

அதில் மிச்சமிருந்த 25 களிமண் பலகை புத்தகங்கள் இன்னும் பிரிட்டிஷ் அருங் காட்சியகத்தில் உள்ளதாம்.

அச்சு, தாள் -இவையெல்லாம் வந்த பின்னர் அமைக்கப்பட்டது தான்பிரான்ஸிலுள்ள பாரீஸ் நூலகம். 1480 இல் பிரெஞ்சு மன்னர் 11 ஆம் லூயி இந்த நூலகத்தை அமைத்தாராம்.

ஆனால், அப்பொழுதெல்லாம் அரசர்கள் மட்டும் தான் நூலகத்தைப் பயன்படுத்த முடியுமாம். அதன் பின்னர் 17ஆம் நூற்றாண்டில் இந்த முறை மாறி பொது மக்களும் அங்கு போகலாம், படிக்கலாம் என்ற நிலைமை வந்தது.

பாரீஸ் நகரத்திலுள்ள போட்லியன் நூலகத்தில் தான் நூல்களின் பட்டியல் தயாரிப்பு பணி (Catalogue) ஆரம்பமானது.

கல்வி வளர்ச்சியையும் நூலகத்தையும் இணைத்தவர் நெப்போலியன் போபார்ட். முற்பணம் செலுத்தி புத்தகம் படிக்கும் முறையை அவர் தான் கொண்டு வந்தார்.

மக்களிடம் வசூலிக்கும் வரியின் ஒரு பகுதியை நூலகத்திற்குப் பயன்படுத்தியவரும்அவர்தானாம். நெப்போலியன் நூலகத்தில் உலகத்திலுள்ள எல்லா மொழி நூல்களும் உண்டாம்.

அங்கே ஒரு தமிழ் நூலும் இருந்திருக்கிறது. அது தான் கம்பராமாயணம்.

அடுத்ததாக குறிப்பிடத்தக்க நூலகம் பிரிட்டிஷ் நூலகம். அங்கு மிகப் பழைய கையேட்டுப் பிரதியெல்லாம் உண்டாம். 1753 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்நூலகத்தில் உள்ள நூல்களை வரிசையாக அடுக்கினால் 180 கி.மீ.நீளத்துக்கு வருமாம்.

உலகின் மிகப்பெரிய நூலகம் அமெரிக்க தலை நகர் வோஷிங்டனில் உள்ளதாம்.

இந்தியாவில் உள்ள பெரிய-பழைய நூலகம் கல்கத்தா நூலகம். இங்கு எல்லா இந்திய மொழிநூல்களும் உண்டு.

மகாகவி பாரதியார் நடத்திய "இந்தியா" இதழின் எல்லாப் பிரதிகளும் இங்கு பாதுகாப்பாக உள்ளதாம்.

ஒருவரிடம் ஒரு புத்தகத்தை கொடுத்து விமர்சனம் எழுதச் சொல்லியிருந்தார்களாம். கொஞ்ச நாள் கழித்து, அவரைப் போய்ப் பார்த்து "என்ன புத்தகத்தைப் படித்துப் பார்த்தீர்களா?" என்று கேட்டார்கள்.

இதற்கு அவர், "இன்னும் இல்லை. இப்பத்தானே விமர்சனமே எழுதி முடித்திருக்கிறேன்" என்றாராம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இனப்பிரச்சினை தீர்வுக்காக அரசியலமைப்பு சட்டத்தை திருத்தம் செய்வதற்கு சர்வஜன வாக்கெடுப்பை நடத்த ஆலோசனை

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கான தீர்வுகளை செயற்படுத்த அரசியல் அமைப்புச் சட்டத்தில் சில சரத்துக்களை திருத்தம் செய்ய வேண்டி ஏற்படும் பட்சத்தில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவும் அரசு ஆலோசனை செய்து வருவதாக அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வடக்கு-கிழக்கு பிரச்சினைகளுக்கு தீர்வினை காணும் பொருட்டு செயல்பட்டு வரும் சர்வகட்சி பிரதிநிதிகள் குழு 90 வீதமான இணக்கப்பாட்டினை எட்டியுள்ளதாகவும் விரைவில் ஏனைய கட்சிகளையும் இணைத்துக் கொண்டு முழுமையான தீர்வுகளை முன் வைக்கவுள்ளதாகவும் அமைச்சரும் பேராசிரியருமான சர்வகட்சி பிரதி நிதிகள் குழுவின் தலைவருமான திஸ்ஸவிதாரண தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி பிரதி நிதிகள் குழுவில் தற்போது 13 அரசியல் கட்சிகள் பிரதி நிதித்துவம் வகிப்பதாகவும் இதுவே நூற்றிற்கும் அதிகமான தடவை குழு கூடி இப் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து வந்த நிலையில் 90 வீதமான பிரச்சினைகளுக்கு இணக்கம் காணப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

அதேவேளை தற்போதைய பிரதி நிதிகள் குழுவினால் தீர்வுகள் காணப்பட்டு பின்னர் இறுதியாக ஐக்கிய தேசியக் கட்சியும் இக் குழுவில் இணைந்து இறுதி தீர்வு காண வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்திருப்பதாகவும் அவர் தெரிவித்திருப்பதோடு இறுதியாக ஐ.தே.க.வைப் போல் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தமிழ் கட்சிகள் என்பனவற்றையும் இணைத்துக் கொண்டு வடக்கு கிழக்கு பிரச்சினைகளுக்கு ஒரு சிறந்த தீர்வினை பெற்றுக்கொடுக்க முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் பேராசிரியர் திஸ்ஸவிதாரண தெரிவித்துள்ளார்.

அரச படைகள் வடக்கில் மேற்கொண்டு வரும் யுத்த நடவடிக்கைகள் மிக விரைவில் முடிவடைய விருப்பதாக தெரிவிக்கப்படுவதால் வடக்கு மக்களின் ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்துவதற்க்க சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவிடமிருந்து கிடைக்கப்பெறும் அரசியல் தீர்வு யோசனைகளை செயல்படுத்த அரசு கவனம் செலுத்தியுள்ளதாகவும் அதன் பொருட்டு அரசியலமைப்பு சட்டத்தில் சில சரத்துக்களை திருத்தம் செய்ய வேணடி ஏற்படலாம்.

அப்படி ஏற்படும் பட்சத்தில் சர்வஜன வாக்கெடுப்பினை நடத்த அரசுதிட்டமிட்டிருப்பதாக அரச அமைச்சர் ஒருவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (6)

# லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியமில்லை

## அரசாங்கம் தெரிவிப்பு

சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பில் சர்வதேச விசாரணையை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

இலங்கை பொலிஸார்இந்த கொலை தொடர்பில் உரிய விசாரணையை மேற்கொள்ளும் தகுதியை கொண்டிருக்கிறார்கள் என இலங்கை அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன இது தொடர்பில் தெரிவிக்கும் போது ஜனாதிபதி இந்த விடயம் தொடர்பாக உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஏற்கனவே உத்தரவிட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் எம்.டி.வி நிறுவன தாக்குதல் மற்றும் லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பில் பொலிஸார் சுமார்28 கைவிரல் அடையாளங்களை பதிவு செய்துள்ளதாகதெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# இராசி பலன்

*12.01.2009*
*(மார்கழி 28, திங்கட்கிழமை)*
*பிரதமை காலை 8.05 மணிவரை*
*பூசம் முன்னிரவு 7.27மணிவரை*
*துதியை பின்னிரவு 6.04 மணிவரை*
*இராகுகாலம் 8.03-9.33 மணிவரை*
*சுபநேரம்-12.33-2.03மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | மனச் சஞ்சலம், தாய் வழி உறவு, சுப செலவு, புதியமுயற்சி. |
| இடபம் | உறவினர் வருகை, தடைப்பட்ட காரியம் கைகூடும், போசன சுகம், பொருள்சேர்க்கை. |
| மிதுனம் | அமைதிக்குறைவு, முயற்சி தாமதம், கடின வார்த்தை, வேலைச் சுமை. |
| கடகம் | புதிய முயற்சி, உறவினர் சந்திப்பு, தெய்வ சிந்தை, போசன சுகம். |
| சிங்கம் | சுப செலவு, பிரயாணம், சயன சுகக் குறைவு, எடுத்த காரியம் தாமதமாகும். |
| கன்னி | கீர்த்தி, கலந்துரையாடல், முயற்சி கைகூடும், தெய்வ தரிசனம். |
| துலாம் | புதிய தகவல், அதிகபிரயாசை, போசனசுகம், தேக நலன். |
| விருச்சிகம் | திடீர்பயணம், அதிகசெலவு, பிதா சிந்தை, புதியதிட்டமிடல். |
| தனுசு | வீண்பகை , காரிய தடங்கல், கௌரவக்குறைவு, போசனசுகம். |
| மகரம் | உறவினர் சந்திப்பு, பொருள் சேர்க்கை, செல்வாக்கு, எடுத்த கருமங்கள் கைகூடும். |
| கும்பம் | ஆரோக்கியம், அதிகாரம், தன்னம்பிக்கை, முயற்சி பலிதம். |
| மீனம் | முயற்சி தாமதம், பணவிரயம், குடும்பக் கவலை, வேலைச் சுமை. |

வளவன்

# மகாவலி கங்கையில் குளிக்கச் சென்ற இரு மாணவர்கள் நீரில் மூழ்கி மரணம்

(கொழும்பு)

கொத்மலையில் மகாவலி கங்கையில் குளிக்கச் சென்றஇரண்டு மாணவர்கள் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இதே வேளை மாணவர்களின் சடலங்கள் சுழியோடிகளால் மீட்கப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்கள் கல்விச் சுற்றுலா சென்ற வேளையிலேயே இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பாடசாலை மாணவர்கள் குளித்துக் கொண்டிருந்த வேளையில் குறித்த இரண்டு மாணவர்களும் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். நாற்பது அடி ஆழத்தில் இருந்து இவ்விரண்டு மாணவர்களினதும் சடலங்கள் சுழியோடிகளால் மீட்கப்பட்டுள்ளன.

இவ்விபத்து தொடர்பாக கொத்மலை பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (6)

# முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கை ஆரம்பம்

புதியாண்டில் பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கைகள் இன்று தேசிய ரீதியாக மேற்கொள்ளப்படவுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலைகளுக்கு இன்று புதிதாக வருகை தரும் பிள்ளைகளை வரவேற்பது தொடர்பான வைபவங்கள் நாட்டின் அனைத்து ஆரம்பப்பிரிவு பாடசாலைகளிலும் இடம் பெறவுள்ளதாக அமைச்சின் செயலாளர்நிமல் பண்டார தெரிவித்துள்ளார். (6-4)



பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையினால் நடத்தப்பட்ட அனைவருக்கும் ஆரோக்கியம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கிடையில் நடைபெற்ற உதைப் பந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டியில் சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட சிலிங்கொ கிறாமின்கிறடிட் கம்பனி லிமிட்டெட்டின் நெல்லியடிக் கிளை அணியினரைப் படத்தில் காணலாம்.

இவ் இறுதிப் போட்டியில் சேவாலங்கா நிறுவன அணியை எதிர்த்து சிலிங்கொ கிறாமின் கிறடிட் கம்பனி லிமிட்டெட் அணி மோதியமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் கடந்த வருடத்தில் மட்டும் 97 பேர் காணாமல் போயுள்ளனர்

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் கடந்த வருடத்தில் மட்டும் 97 பேர் காணாமல் போயிருப்பதாக மன்னார் மாவட்டத்தில் மனிதாபிமான பணியில் ஈடுபட்டு வரும் அமைப்பு ஒன்றின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மன்னார் மாவட்டத்தில் 2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதிக்குள் 97 பேர் காணாமல் போயுள்ளனர்.

அவர்களில் பலர் இரவு நேரங்களில் வீடுகளில் வைத்து ஆயுத முனையில் விசாரணைக்கு என அழைத்துச் சென்ற நிலையில் காணாமல் போயுள்ளனர். ஆயுத முனைகளில் வருபவர்கள் சரளமாக தமிழில் பேசியே இவர்களை அழைத்துச் செல்வதாக முறைப்பாடுகளில் பதிவு செய்யப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.

பலர் தங்களது கடமை நிமித்தம் தங்களுடைய வீடுகளில் இருந்து வெளியில் சென்ற வேளையில் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காணாமல் போன மற்றும் விசாரணைக்கு என அழைத்துச் செல்லப்பட்டவர்களில் பலர் துப்பாக்கிச் சூட்டுக்காயங் களுடன் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, காணாமல் போன மற்றும் கடத்தப்பட்டவர்கள் மீண்டும் வீடு திரும்புவார்கள் என அவர்களுடைய உறவினர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர். (6)




# வசதி குறைந்த மாணவர்களுக்கான நிதி உதவித் திட்டம்

**07.01.2009 அன்று வலம்புரியில் வெளியான "வசதி குறைந்த மாணவர்க ளுக்கான நிதி உதவித் திட்டம் தேவை" என்ற ஆசிரியர் தலையங்கம் தொடர்பில் சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தால் எழதப்பட்ட கடிதம் இங்கு தரப்படுகிறது.**

**(ஆ-ர்)**

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் மேற்படி உதவித்திட்டத்தை நடத்தி வருகின்றது. இவ் உதவித்திட்டத்தை நடத்த உள்நாட்டு,வெளிநாட்டு நன் கொடையாளர்களின் நன்கொடைகள் பெறப்படுகின்றன.

நிதிப்பற்றாக்குறையினால் "உதவி தேவை" என இனம் காணப்படும் மாணவர்களுக்கு முழுமையாக உதவிகள் வழங்க இயலாமை உள்ளது.

தற்போது 150 வசதி குறைந்த மாணவர்களுக்கும் , 100 பெற்றோரை இழந்த மாணவர்களும் தொடர்ச்சியான இவ் உதவியைப் பெற்று வருகின்றார்கள்.

தற்போது இலங்கை மாணவர் கல்வி நிதியம் – அவுஸ்திரேலியா நிறுவனத்தின் ஆதரவுடன் புதிதாக "உதவும் கரங்கள்" திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 100 பிள்ளைகளை இத்திட்டத்தில் இணைப்பதாக திட்டமிடப்பட்டுள்ளது. 150 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. 45 பிள்ளைகளுக்கு உதவிகள் கிடைத்துள்ளன. 2008 கார்த்திகையில் இருந்து இவர்கள் இணைக்கப்பட்டுவிட்டார்கள். விண்ணப்பங்களில் உள்ள பிள்ளைகள் படிப்படியாக திட்டத்தில் இணைக்கப்படுவார்கள்.

இத்திட்டங்கள் யாழ். மாவட்ட பிரதேச செயலக உதவி அரசாங்க அதிபரின் கீழ் இயங்கும் சிறுவர் மேம்பாட்டு அலுவலர்களின் உதவியுடன் செயற்படுத்தப்படும் இச் செயற்பாட்டால் ஒருபிள்ளை பல இடங்களில் உதவி பெறுவது தடை செய்யபடுகின்றது. பல பிள்ளைகள் உதவி பெற வழி சமைக்கின்றது.

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் அரசாங்க அதிபரின் தலை மைத்துவத்துடன் இயங்கும் மாவட்ட சிறுவர் அபிவிருத்திக்குழுவில் அங்கத்துவம் உடையது. உதவி வழங்க விரும்பமுடைய நன்கொடையாளர்கள் சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் Centre For Child Development என்னும் பெயரில் அன்பளிப்புக்களை செலுத்தலாம்-உதவி வழங்க விருப்பமுடையோர் 021- 222 7307 என்னும் தொலைபேசியுடன் அல்லது 0602211354 என்னும் தொலை பேசியுடன் தொடர்பு கொண்டு விபரங்களை பரிமாறிக்கொள்ளலாம்.


கல்வி கற்றலில் ஆர்வமுடைய பிள்ளை தங்களுக்கு உதவி செய்வதற்கு யாரும் இல்லை என்ற மன நிலை ஏற்படக்கூடாது என்பதை தனது மனநிலையில் வைத்து மேற்படி நிறுவனம் செயற்படுகின்றது. நிறுவனம் கூடிய அளவும் சேவை அடிப்படையில் தான் இயங்குகின்றது.

*இல 76A, அம்மன் கோவில் வீதி,*
*கொக்குவில் கிழக்கு*
*கொக்குவில்.*

*க.பரதையானந்தன்*
*சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம்.*

# பெரிய புலம் மகாவித்தியாலயத்தில் 'நிஷா' புயலினால் பாரிய சேதம்

(யாழ்ப்பாணம்)



கடந்த நவம்பர் மாதத்தில் வீசிய புயல் மற்றும் மழை காரணமாக யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் இரண்டு இலட்சம் ரூபாபெறுமதியான நூல்கள் , சங்கீத,நடன உபகரணங்கள் , கீழைத்தேய பான்ட் வாத்தியக் கருவிகள் மற்றும் அலுவலக கோவைகள் என்பன கடும் சேதம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் தளபாடங்கள் சிலவும் களவாடப்பட்டுள்ளதா கவும் பாடசாலை வளாகத்தில் நின்ற பயன்தரும் மரங்களும் அழிவடைந் துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


இழப்புகள் தொடர்பில் ,கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார்.கடும் முயற்சியினால் சேர்க்கப்பட்ட வளங்கள் அழிவடைந்துள்ளமையால் பாட சாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிபர் சி. இராமலிங்கம் தெரிவித் துள்ளார். (ஓ-36)

# முறைசாராக்கல்வி கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட முறைசாராக் கல்வி விசேட கல்வி வேலைத்திட்டங்களுடன் தொடர்புடைய அரச நிறுவனத்தலைவர்களுடனான கலந்துரையாடலும் நிலையங்கள் திட்டமிடுதலும் தொடர்பாக எதிர்வரும் 22ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் 4.30 மணி வரை யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு 5 கல்வி வலயங்களிலுமுள்ள கோட்டக்கல்வி அதிகாரிகள் முறைசாராக் கல்வி உதவிப்பணிப்பாளர்கள், முறைசாராக் கல்வி செயற்திட்ட உத்தியோகத்தர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளுமாறு வட மாகாண மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டுள்ளார். (6)



அமரர் தியாகராசா மகேஸ்வரன் ஞாபகார்த்த *மகேஸ்வரன் தர்மசுரபி* என்ற பெயரில் புதிய அன்னதான மண்டபத்திறப்பு விழாநிகழ்வு நேற்று முன்தினம் காரைநகரில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலாநிதி சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரர் குருக்கள் நாடாவெட்டித் திறந்து வைப்பதனையும், துணைவியார் விஜயகலா மகேஸ்வரன் அகல் விளக்கு ஏற்றுவதையும், மகன் பிரணவன் தந்தையின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிப்பதனையும், மகள் பவதாரணி வரவேற்புரை நிகழ்த்துவதையும் சிவஸ்ரீ க. ஞானசம்பந்தக் குருக்கள் ஆசியுரை ஆற்றுவதையும் வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையுரை ஆற்றுவதனையும் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, காரைநகர் உதவி அரச அதிபர் இ.த.ஜெயசீலன் ஆகியோர் நினைவுப் பேருரை ஆற்றுவதனையும், தெல்லிப்பளை துர்க்காபுர மகளிர் இல்லத்திற்கான கொடுப்பனவை திருமதி விஜயகலா மகேஸ்வரன் தலைவர் ஆறு திருமுருகனிடம் கையளிப்பதனையும்,நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்-கற்பகன்)

# இலங்கையில் தமிழர் 38

## ஆதி இரும்புக் காலம்

இலங்கையின் வட மத்திய பகுதியில் (அனுராதபுரம் போன்ற இடங்களில்) உள்ள ஆதி இரும்புக் காலத் தலங்களைக் காட்டிலும் வடமேற்கு இலங்கையில் காணப்படும் தலங்கள் காலத்தால் முந்தியவை எனப் பேராசிரியர் ஸெனெவிரத்ன கருதுவது கவனிக்கப்பட வேண்டியதாகும். அனுராதபுரத்தில் ஆதி இரும்புக் காலம் இற்றைக்கு 2900 ஆண்டுகளுக்கு முன் தொடங்கியது என்பதற்கு சான்று உண்டெனின், வடமேற்கு இலங்கையிலுள்ள பொம்பரிப்புப் போன்ற தலங்கள் அனுராதபுரத்தைக் காட்டிலும் முற்பட்டவை எனலாம்.

இதுவரை, எடுத்துக்கூறப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் ஆதி இரும்புக் காலம் தென்னிந்தியாவில் பொ.ஆ.மு.1200 அளவில் (இற்றைக்கு 3200 ஆண்டுகளுக்கு முன்) தொடங்கியது என்றும் இலங்கையில் பொ.ஆ.மு.1000 அளவில் (இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்) தொடங்கியது என்றும் கூற இடமுண்டு.

### பண்பாட்டுப் பரம்பலுக்கான காரணங்கள்

### நெடுந்தூர வணிகம்

தென்னிந்தியா- இலங்கைப் பிராந்தியத்துக்கு ஆதி இரும்புக் காலப் பண்பாடு வெளியிலிருந்து கொண்டு வரப்பட்ட ஒரு பண்பாடு என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. முன்னர் கூறியது போன்று, எங்கிருந்து இப் பண்பாடு கொண்டுவரப்பட்டது என்பதையிட்டுக் கருத்துக்கள் பல உள. தற்போதுள்ள சான்றுகளின் உதவிகொண்டு இவ் வினாவுக்குத் திட்டவட்டமான விடை எதுவும் கொடுக்கமுடியாது.

இப் பண்பாடு எங்கிருந்து வந்தாலும், அதனை இந்தியத் துணைக் கண்டத்துக்குக் கொண்டு வருவதற் குப் பல காரணிகள் செயற்பட்டன. இவற்றுள் முக்கியமான ஒரு காரணி நெடுந்தூரக் கடல் வழி வணிகம் என்பதில் ஐயமில்லை.

இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன் ஆதி இரும்புக் காலப் பண்பாட்டின் வருகைக்கும் நகர வாழ்க்கையின் தோற்றத்துக்கும் தூரப் பகுதிகளிலிருந்து கடல்வழியாக வந்த வணிகர்கள் காரணமாய் இருந்தனர். இவர்கள் மேற்கே மத்திய தரைக் கடற் பிரதேசம் மற்றும் மேற்காசியா ஆகிய இடங்களிலிருந்தும் வடக்கே குஜராத், கங்கைச் சமவெளி ஆகிய இடங்களிலிருந்தும் தென்னிந்தியா, இலங்கைப் பிராந்தியத்துக்கு வந்தனர்.

மேற்கிலிருந்து வணிகர்கள் தென்னிந்தியக் கரையோரத்துக்கு வர்த்தக நோக்குடன் மிக முற்பட்ட ஒரு காலத்தில் வரத் தொடங்கினர் என்ற கருத்தை நீண்டகாலமாகப் பல அறிஞர்கள் தெரிவித்துள்ளனர். பொ.ஆ.மு. இரண்டாவது ஆயிரவாண்டின் இறுதியிலிருந்து (ஏறக்குறைய 3000 ஆண்டுகளுக்கு முன்) ஐரோப்பாவில் மத்திய தரைக் கடலில் வர்த்தகம் நடத்தியோர் தென்னிந்தியா-இலங்கைப் பிராந்தியத்தின் உற்பத்திப் பொருட்களைப் பெரிதும் நாடினர். மத்திய தரை வர்த்தகத்தில் அக்கால கட்டத்தில் பீனிசியர் என்போர் மிக முக்கியமான பங்கை வகித்தனர்.

தூர இடங்களுக்குத் துணிவுடன் கடற் பயணம் மேற்கொண்ட பீனிசியர் இந்து சமுத்திரத்தை அண்டிய பகுதிகளுக்கும் வர்த்தக நோக்குடன் சென்றனர். மேற்கு ஆசிய வர்த்தகம் இந்து சமுத்திரப் பகுதிகளுக்குப் பரவுவதற்குப் பீனிசியர் பெருமளவு பொறுப்பாக இருந்தனர் எனலாம்.

மேற்கு ஆசியாவிலிருந்து வந்த வணிகர் தென்னிந்தியா- இலங்கைப் பிராந்தியத்து விளைபொருட்களைப் பெற்றுச் செல்ல விரும்பியதன் விளைவாகச் சில முக்கிய முன்னேற்றங்கள் ஏற்பட்டன.

ஒன்று, பண்டப் பரிமாற்றத்துக்கான மையங்களின் தோற்றமும் இம் மையங்களை இணைக்கும் போக்குவரத்து வழிகளின் தோற்றமும் (ஒரு வர்த்தக மார்க்க வலையமைப்பின் தோற்றம் -trade network) எனலாம். இரண்டாவதாக, மக்கள் இப் பிரதேசங்களின் மூலவளங்களை வர்த்தகத்துக்காகப் பெறத் தொடங்கியமை. இதனால் பயன்மிகுந்த மூல வளங்கள் காணப்பட்ட இடங்களில் குடியிருப்புகள் தோன்றின. இவை கரையோரத்திலும் உள்நாட்டிலும் புதிய குடியிருப்புகளாக எழுச்சி பெற்றன.

### முத்து வர்த்தகம்

வெளியிலிருந்து வந்த வணிகர் பெற விரும்பிய முக்கியமான ஓர் உற்பத்திப் பொருள் முத்து ஆகும். இது மன்னார்க் கடலில்பெறப்பட்டது. ஆதி இரும்புக் காலத்தில் இங்கு நடைபெற்ற முத்துக் குளிப்புப் பற்றியும் முத்து வர்த்தகம் பற்றியும் கிடைத்துள்ள தொல்லியல் சான்றுகள் மிகக் குறைவே. தமிழ்நாட்டுக் கரையில் கொற்கையிலும் இலங்கைக் கரையில் பூக்குளம் என்ற இடத்திலும் முத்துச் சிப்பிகள் ஆ.இ.காலப் பொருட்களுடன் கிடைத்துள்ளன. இதனால் ஆ.இ.கால வர்த்தகத்தில் முத்து ஒரு முக்கிய பொருளாக இருந்திருக்க வேண்டும் என்ற கருத்துக்கு இச் சான்று வலுவூட்டுகின்றது எனலாம். ஆ.இ. காலத்தை அடுத்து வரும் ஆதி வரலாற்றுக் காலத்தில் எழுதப்பட்ட சமஸ்கிருத, தமிழ், கிரேக்க நூல்களில் மன்னார் வளைகுடா முத்துக்கள் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. இவற்றின் உதவி கொண்டு, அக்காலத்தில் மன்னார் வளைகுடாவில் பெறப்பட்ட முத்துக்கள் அக்காலத்தில் மிகவும் சிறப்பு வாய்ந்தவையாகவும் விலையுயர்ந்தவையாகவும் கருதப்பட்டன என அறியக் கூடியதாய் உள்ளது.

பேராசிரியர்
கா. இந்திரபாலா

மேற்காசியாவிலிருந்து வந்த வணிகர் மன்னார்க்கடல் முத்துக் களுக்கு இத்தகைய சிறப்புக் கிடைப்பதற்குக் காரணமாய் இருந்திருக்க முடியும். இவ் வணிகருள் பீனிசியர் முக்கியமானவர்.

மன்னார் வளைகுடா முத்துக்கள் பொ. ஆ. மு.நாலாம் நூற்றாண்டளவில் வட இந்தியாவுக்கும் மேற்காசியாவுக்கும் வணிகரால் எடுத்துச் செல்லப்பட்டன எனக் கொள்வதற்குக் கிரேக்க மூலங்கள் சான்றுகளாகின்றன. இலங்கையைப் பற்றிய குறிப்புக்களை விட்டுச் சென்றுள்ள மிக முற்பட்ட கிரேக்க எழுத்தாளர் பொ.ஆ. மு. நாலாம் நூற்றாண்டில் வாழ்ந்த மெகஸ்தீனிஸ் ஆவர். இவர் குறிப்புக்களின்படி, இந்தியாவில் கிடைத்த முத்துக்களைக் காட்டிலும் பெரிய முத்துக்கள் இலங்கையில் கிடைத்தன.

(தொடரும்)

# மும்பையில் மூன்று மணி நேரம் 2

என் நண்பர் வந்ததும் நானும் விமான நிலயத்திலேயே எனது காலைக் கடன்களை முடித்து வெளி வாசல் வரை வந்து எம்முடன் வந்த அடுத்த குழுவினரைத் தேடிய போது அவர்கள் எங்ளை விட்டு வெளியில் போயிருந்தனர். எனது நண்பருடனும் சிறிய ஆனால் நவீன தள்ளுவண்டியில் (Trolley)ல் பொதிகளுடனும் (எம்முடன் பயணித்த சகலரும் போன நிலையில்) ஆமை வேகத்தில் நடந்து வந்துகொண்டிருக்கும் போது "Akbar Travels of India " எனும் சொற்பதங்கள் என் கண்களில் பட்டன.

எனது நண்பரிடம் நான் ஏற்கனவே கூறிய ஆதங்கத்தை வெளிப்படுத்தி இரவானாலும் பரவாயில்லை நாம் மும்பையைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருவோம் என்று கேட்டேன். அவர் அதற்கு இணங்கவில்லை. அதற்கான காரணங்களும் நியாயமானவையே என நான் உள்ளூரப் புரிந்துகொண்டேன். அதாவது சுங்க அதிகாரி கூறிய காரணங்களே அவை.




### துணிவே துணை

எனவே நான் தனியேயாயினும் போக வேண்டுமென முடிவுசெய்து அந்த Akbar Travel ஐ அணுகி என்னுடைய எண்ணத்தை வெளியிட்டேன். ஆனால் அவர் இங்கு நாங்கள் வைத்திருக்கும் வாகனங்கள் விமான நிலையத்திலிருந்து அவரவர் இருப்பிடங்களுக்கு பயணிகளைக் கொண்டு செல்வதற்கும் மற்றும் எவரும் கோரும் பட்சத்தில் அவர்களது இருப்பிடங்களுக்குச் சென்று விமான நிலயத்திற்குக் கொண்டு வருவதற்குமே பயன்படுத்தப்படுகின்றன. சுற்றுலாவிற்கான வாகனங்கள் தேவையானால் நீங்கள் வெளியே சென்று அதற்கென உள்ளவற்றை அதாவது (Guide) வழிகாட்டியுடன் கூடிய வாகனங்களை விடுந்ததும் ஒழுங்கு பண்ணவேண்டுமென எனது கோரிக்கைக்கு இணங்க மறுத்துவிட்டார்.

### விடாமுயற்சி

இருந்தும் நான் விடுவதாக இல்லை. அவரைக் குசலம் விசாரித்து பல மனிதாபிமான விடயங்களையும் கதைத்துக் கொண்டிருந்தபோது அவர் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர் என்றும் தமிழரான எமக்கும் அவர்களுக்கும் பல தொடர்புகளும், பழக்கவழக்கங்களும், உணவு வகைகள் என்பனவற்றில் ஒற்றுமையும் உண்டெனவும் ஒத்துக்கொள்ள வைத்தேன். இதனால் அவருடைய மனமாற்றத்தையும் அறிந்து கொண்டேன்.

இந்நிலையில் மீண்டும் என் எண்ணத்தை வெளியிட்டேன். இம்முறை எனக்கு சாதகமான பதில் கிடைத்தது. யாருடனோ தொலைபேசியில் தொடர்புகொண்ட பின் எனக்கு உதவ முன் வந்தார். நாங்கள் நண்பர்களாகி விட்டோம். பின்னர் ஒரு ஒப்பந்தத்திற்கு வந்தோம்.

அதாவது 4 மணிநேரம் 40 கிலோமீற்றர் அவர்களுடைய சொகுசு வாகனத் (Car) தை உபயோகிக்க ரூ. 1,600/- (இந்திய ரூபா) எனவும், மேலதிகமான ஒவ்வொரு கிலோ மீற்றருக்கு ரூ. 15/- எனவும் சாரதிக்கு ரூ 150/-ம் கொடுக்க வேண்டுமென்பதும் உடன்பாடு, நான் மிகவும் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு தனியே புறப்பட ஆயத்தமானேன். எனது நண்பரின் நிலை இரண்டும் கெட்டான் நிலையானது. எனவே அவரிடம் மீண்டும் என்னுடன் இணையுமாறு கேட்டேன். அப்பொழுதும் அவர் தயக்கம் காட்டினார். எனவே அவரது மனம் நோகாமல் "நீங்கள் என்னுடன் வந்தால் எனக்கு சந்தோஷம் .அப்படி வராவிட்டால் நான் கட்டாயப்படுத்தமாட்டேன் .



ஆனால் காட்சிப்படுத்த வேண்டியவற்றை படம் பிடிக்க என்னுடன் கூட ஆளில்லையே என்ற கவலையுண்டு" என்று கூறினேன்.

என்ன எண்ணினாரோ, என்னுடன் வர ஒருவாறு சம்மதித்தார்.

எனவே எமது பயணம் அதிகாலை 4.15 க்கு ஆரம்பமானது.

### மும்பையில் சொகுசு வாகனத்தில் பயணம்

சிறந்ததொரு வாகனம் (Car) தரப்பட்டது. எமது பொதிகள் அனைத்தும் பின்புறம் வசதியாக வைக்கப்பட்டு பாதுகாப்புடன் முன் ஆசனங்களில் நாம் அமர்ந்து புறப்பட ஆயத்தமானபோது அச் சாரதி மிகவும் கம்பீரமாக "Good Morning Sir" எனக் கூறி நல்லதொரு காலைப் பொழுதை ஆரம்பித்து வைத்தார். அந்த நேரம் பயணம் செய்வது மிகவும் இதமாக இருந்தது. அதுவும் என் ஆசையை நிறைவேற்றும் முதல்படியாக அமைந்த நேரமல்லவா?

### மும்பையில் தமிழ்

நான் ஆங்கிலத்திலேயே அவருடன் உரையாடினேன். கஷ்டப்பட்டாலும் அவரும் நான் கூறியவற்றை விளங்கிக் கொண்டார். எனவே சுங்க அதிகாரி குறித்துத் தந்த இடங்களை அவருக்குக் காட்டினேன். அதைப் பார்த்த அவர் இதுபற்றி வாகனம் எடுக்கும்போதே தனக்கு கூறப்பட்டதாகவும் தான் எங்களுடன் மிகவும் ஒத்தாசையாக இருப்பதாகவும் கூறினார்.

ந.சிவரத்தினம்
உதவிப் பொதுமுகாமையாளர்
இலங்கைவங்கி-வடபிராந்திய காரியாலயம்.

எமது வாகனம் சன நடமாட்டம் குறைந்த அந்த நகர வீதிகளினூடாக போய்க் கொண்டிருந்தது. அவர் சரளமாக என்னுடன் ஆங்கிலத்தில் உரையாடுவதில் கஷ்டப்படுவதை உணர்ந்து கொண்ட நான் மிகவும் அவதானமாக உங்களுடைய தாய்மொழி மராட்டி தானே? எனக் கேட்டேன். என்னே ஆச்சரியம்! அவர் தமிழ் நாடு என்றாரே பார்க்கலாம். அதுவும் திருநெல்வேலி என்றும் ஆங்கிலத்தில் கூறினார்.

(வளரும்)

# 2008 இல் கூகுளின் சாதனைகள்




தொடர்ந்து ஏதாவது மாற்றங்களையும் புதிய அப்ளிகேஷன்களையும் தருவது கூகுளின் செயல் தன்மை என்றாலும் கடந்த 2008 ஆம் ஆண்டில் இந் நிறுவனத்தின் செயல்பாடுகள் எல்லாமே முள் பாதையின் மீது நடந்து வந்து மேற்கொண்ட வெற்றி களாகவே அமைந்தன.

சென்ற ஆண்டில் தான் அதன் தேடல் மற்றும் தேடல் தளங் களில் விளம்பரம் என்ற எல்லைகளைத் தாண்டி தன் சேவைகளை அதிகமாக விரிவு படுத்தியது எனலாம். ஆண்டின் தொடக்கத் திலேயே டபுள் கிளிக் என்ற நிறுவனத்தை கூகுள் வாங்கியது.

இதில் பல எதிர்ப்புக்களைச் சந்தித்தது. 310 கோடி டொலர் கொடுத்து வாங்கிய இந்த நிறுவனத்தினால் கூகுள் கிராபிகல் டிஸ்பிளே விளம்பரங்களை சிறப்பாக வெளியிட முடிந் தது. அடுத்ததாக கூகுள் அப்பிளிகேஷன் இஞ்சின் என்ற புராஜக்டை வெளியிட்டது.

இதில் அடிப்படை பயன்பாடுகள் இலவச மாகத் தரப்பட்டன.

மிகப் பயன்தரும் அப்ளி கேஷன்களுக்கு கூகுள் பணம் கேட்டது. கேட்ட பணத்தைக் கொடுத்து விட்டுத் தேவையானதைப் பெற்றுக் கொண்டு போ என்ற இணையப் பழக்கம் இதிலிருந்து தொடங்கி அதற்கு cloud computing conecept என்ற பெயரும் தரப் பட்டது.

**கூகுள் அப்ளிகேஷன்ஸ்**

(Google Apps) டொக்கியூமென்ட்ஸ், ஜிமெயில்,கலண்டர் இணைந்து தரப்பட்ட தால் மைக்ரோசொப்ட் மற்றும் எக்சேஞ்சுக்கு போட்டியாக இருக்குமோ என்று எதிர்பார்க் கப்பட்டது.இதனாலேயே மைக்ரோசொப்ட் தன் ஆபிஸ் தொகுப்பினை cloud computing conecept அடிப்படையில் இணையத்தில் கொண்டு வந்தது.கூகுள் தரும் போட்டியை சமாளித்தது. அதனாலேயே கூகுள் தன்னிடத் தில் கட்டணம் செலுத்தியவர் களுக்கு 99.9 சத விகிதம் இந்த சேவைகள் கட்டாயம் கிடைக்கும் என்ற உறுதி மொழியைத் தந்தது.

சென்ற ஆண்டின் செப்ரம்பர் மாதத்தில் தான் கூகுள் தன் பெரிய வெடிகுண்டினைப் போட்டது. அதுதான் பிரவுசர் உலகில் தன் பங்குக்குக் கொண்டு வந்த குரோம் பிரவுசர். இருக்கின்ற அனைத்து பிரவுசர்களிலும் அதிவேகமாக பிரவுசர் என்ற பெயரை இன் னும் தக்க வைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் குறிப்பிட்ட வகையில் தான் ஒரு பிரவுசர் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க் கும் நம் மக்களுக்கு இதன் சில விடுதல்கள் பிடிக்கவில்லை.

இருப்பினும் குரோம் எப்படியும் விரைவில் முதல் இடத்தைப் பிடித்துவிடும் என்றே அனைவரும் எதிர்பார்க்கின்றனர். இதன் மூலம் கூகுள் இணையப் பயன்பாடு அனைத் தையும் தன் பக்கம் திருப்ப முயற்சிக்கிறது என்பதனை அனைவரும் உணர்ந்திருக்கின் றனர். இதன் அடிப்படையிலேயே கூகுள் டொக்ஸ் மற்றும் ஜிமெயில் வசதிகளைத் தொடர்ந்து கூகுள் மேம்படுத்திக் கொண்டு வருகிறது.

அனைவரும் ஆச்சரியத்துடன் பார்க்கும் வகையில் குரோம் பிரவுசரின் அடுத்த மேம்படுத்தப்பட்ட பதிப்பு குரோம் 1.0 இனை வெளியிட்டது. இன்டர்நெட் அதிகமாகப் பயன் படுத்த பல்வேறு சாதனங்களைத் தந்து அதன் மூலம் வருமானம் ஈட்டுவதுதான் கூகுளின் நோக்கம் என்பது மேலே குறிப்பிட்ட செயல் பாடுகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

அடுத்து வெளிவந்த ஆண்ட்ராய்ட் மொபைல் இயக்கத் தொகுப்பின் பின்னணி யும் இதுதான்.ஓப்பன் சோர்ஸ் அடிப்படை யில் ஒரு இயக்கத் தொகுப்பினை ஏற்படுத்த வேண்டும் என பல நிறுவனங்களை ஒருங்கிணைத்து தான் அதற்கு தலைமை யேற்று கூகுள் ஆண்ட்ராய்ட் தொகுப்பைக் கொண்டு வந்தது.சென்ற ஒக்டோபரில் டி-மொபைல் நிறுவனம் ஆண்ட்ராய்ட் அடிப் படையில் இயங்கும் முதல் மொபைல் போனை வெளியிட்டது.

பலவாறான ஆர்ப்பரிப்புடன் வெளியிடப் பட்ட இந்தப் போனுக்குப் பாராட்டுக்கள் சிறிது அடங்கியே பெறப்பட்டன. 2009 இல் அதிக வகையான போன்கள் ஆண்ட்ராய்ட் இயக் கத்தில் இயக்கத்தை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேடல் தள முடிவுக ளுக்கு அருகே விளம்பரங்கள் வெளியிடப் பட்டன.

**ஆர்.யூ.பாலமுருகன்**

விளம்பரங்களைத் தந்தவர்கள் இணையத்தில் உலா வருவபவர்கள் அதன் மீது கிளிக் செய்தால் மட்டுமே கூகுள் நிறு வனத்திற்குப் பணம் செலுத்த வேண்டும் என்ற வகையில் விளம்பரங்கள் வெளி யிடப்படுகின்றன. பொருளாதார மந்த நிலை யில் இதுபோன்ற கட்டணச் சலுகை பல நிறு வணங்களை கூகுள் பக்கம் வரச் செய்தது. இதனால் கூகுள் வருமானம் எங்கோ சென்றது. இவ்வகையில் இதன் போட்டியாள ரான யாஹூ அருகே கூட நெருங்க முடிய வில்லை.

மைக்ரோசொப்ட் கூகுள் நிறுவனத்திற்கு இணையாக வரமுடியாததால் யாஹூவை வாங்கிப் போட்டியில் சரிக்குச் சரியாக நிற்க முடிவு செய்தது. இந்தக் காய்நகர்த்தலை மிகவும் சாதுர்யமாக கூகுள் விளையாடியது. யாரும் எதிர்பாராத வகையில், ஏன் யாஹூவே எண்ணிப் பார்க்க இயலாத வகையில் யாஹூ கூகுள் நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற் கொண்டது.கூகுள் தரும் தேடல் விளம்பரங் களைத் தன் தளத்தில் காட்ட யாஹூ ஒப்புக் கொண்டது. ஒப்பந்தத்தின் மூலம் முதல் ஆண்டில் 80 கோடி டொலர் வருமானம் கிடைக்கும் என யாஹூ கணக்குப் போட்டது.

கூகுள் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கை யில், யாஹூ சுதந்திரமாக இயங்க வேண்டும் எனத் தான் விரும்புவதாக அறிவித்தது. ஆனால் யாஹூ இந்த ஒப்பந்தம் ஏற்பட்டும் தான் இயங்குவதைச் செம்மைப்படுத்த முடிய வில்லை. பெப்ரவரியில் மிகப் பெரிய எண் ணிக்கையில் தன் ஊழியர்ககளை வீட்டுக்கு அனுப்பியது.

டிசம்பரிலும் 1,250 பேர் வெளியே தள்ளப்பட்டனர். இந்தக் குழப்பத்தில் யாஹூ வின் தலைமை அதிகாரி ஜெர்ரி யாங் துண்டை உதறித் தோளில் போட்டுவிட்டு ஆளை விடுங்கப்பா என்று ஜகா வாங்கிக் கொண்டார்.

தொடர்ந்து அமெரிக்க நாட்டின் நீதித் துறை யாஹூ -கூகுள் ஒப்பந்தத்திற்கு எதிர்ப் புத் தெரிவிக்க கூகுள் யாஹூவினைக் காப் பாற்ற நீட்டிய கரத்தை இழுத்துக் கொண்டது.

அதனைக் கேள்விப்பட்டு யாஹூவைக் காப்பாற்ற வந்த கூகுள் மற்றும் ஒப்பந்தம் செய்த யாஹூவினையும் பார்த்து மைக்ரோ சொப்ட் கை கொட்டி கேலிச் சிரிப்புச் சிரித்தது.

இந்தப் பேராட்டத்தில் காயம் பட்டது யாஹூ தான். கூகுள் மீண்டும் பின் வாங்கி தன் காரியத்தில் கண்ணாய் இருக்கத் தொடங் கியுள்ளது.கூகுள் இந்த ஆண்டும் மேலும் பல புதிய சாதனங்களையும் வசதிகளையும் தரும் என்று எதிர்பார்க்கலாம்.




# வகுப்பு அடையாளமும் அதிகாரமும்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

லூயி அல்தூஸர் சமூகத்தின் ஒரு பிரிவு (பூசுவர்கள்) ஏனையோரை தனது பிரஜை களாக (Subject) சித்தாந்தத்தின் வாயிலாக உருவாக்கிக் கொள்கிறது எனக் கூறுகி றார்.

இந்தச் செயற்பாட்டை அல்தூஸர் inter pellation எனக் குறிப்பிடுகிறார்.

இந்த வகையிலே பொருளாதார ஆதிக் கம் மிக்க பூசுவர்கள் அதிகாரம் மிக்க பிரஜை யாகவும் (Subject) ஏனையோர் அதிகாரம் மிக்க பிரஜையின் பிரஜைகளாகவும் (Subjects) சித்தாந்தத்தின் மூலமாக நிலை நிறுத் தப்படுகின்றனர்.

எனினும் அதிகார வலுக் குறைந்த பிரஜைகள் (Subjects) தமக்கென சித்தாந் தத்தைக் கொண்டிருக்கின்றனர் என்பதனை மறுக்கமுடியாது.

**மகேந்திரன் திருவரங்கன்**
இறுதி வருட மாணவன்
பேராதனை பல்கலைக்கழகம்

ஏனெனில், உதாரணமாக நவீன முதலா ளித்துவ சமூகத்திலே பச்சை இறைச்சியை கை,நகம்,பற்களின் உதவியுடன் விழுங்கி நுகருவோர் இருக்கவே செய்கின்றனர். இப் பழக்கவழக்கத்தின் இருப்பு ஆதிக்க வகுப் பாரின் சித்தாந்தத்துக்கு மாறான சித்தாத் தங்கள் காணப்படுகின்றன என்பதைக் கோ டிட்டுக் காட்டுகிறது.

இவ்வாறான மாற்றுச் சித்தாந்தங்களை நாம் வலுவுற்றோரின் தடுப்பு (Resistance) வெளிப்படும் முறை களாகவும் கருதமுடியும் இதன்மூலமாகச் சித்தாந்தம் என்பது ஆளுவேரின் அல்லது அதிகாரம் படைத் தோரிடம் மட்டுமே உள்ளது என்ற வாதத்தை நிராகரிக்க முடியும்.

எனினும் சித்தாந்தங்களின் பலமானது நவீன முதலா ளித்துவ சமூகத்தில் காணப் படும் வேறுபட்ட வகுப்பினரிடத்தில் நிலவும் வேறுபட்ட பொருளியற் பலத்தால் நிர்ணயிக் கப்படுகிறது.

நவீன முதலாளித்துவ சமூகம் என்பது பணபல மற்றும் பொருள் பல வேறுபாடு களின் அடிப்படையிலே மட்டும் கூறப்பட்டுள்ள ஒரு சமூகம் அல்ல.

சாதி (Caste) , பால்நிலை , (gender) , இனத்துவம் (Cethnicity) , சமயம் (religion) மற்றும் மொழி (language) போன்ற ஒருவரின் வகுப்புத் தவிர்ந்த ஏனைய அடையாளங்களும் அவர் அதிகாரம் மிக்க பிரஜையா (Subject) அல்லது ஆளப் படும் பிரஜையா (Subject) என்பதனைத் தீர்மானிக்கின்றன.

எனவே சித்தாந்தம் (Ideology), சித்தாந் தத்தின் பலம் (Strength of ideology) அதிகாரம் மிக்க பிரஜை (Subject) ஆளப்படும் பிரஜை (Subject)போன்ற விடயங்களை ஆராய்கையில் நாம் ஒரு வரின் வகுப்பு (Class)- தவிர்ந்த ஏனைய அடையாளங்களுக்கும் முக்கியத்து வம் அளிக்க வேண்டியது மிகவும் அவசிய மாகும். (முற்றும்)

# விண்டோஸ் எக்ஸ்பி மே 30 வரை

மைக்ரோசொப்ட் நிறுவனம் தன்னுடைய விண்டோஸ் எக்ஸ்பி தொகுப்பின் விற்ப னையை 2008 ஆம் ஆண்டின் தொடக்கத் திலேயே நிறுத்தி வைத்துத் தன் விஸ்டா சிஸ்டத்திற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்கத் திட்டமிட்டது.

Microsoft Windows xp

ஆனால் விஸ்டா அவ்வளவாக மக்களிடையே வரவேற்பைப் பெறாததால் மைக்ரோ சொப்ட் நிறுவனத் துடன் ஒப்பந்தம் மேற்கொண்ட கணனித் தயாரிப்பாளர்க ளின் வேண்டு கோளுக்கி ணங்க ஜூன் 2008 வரை நீடித்தது.

ஜூனுக்குப் பின் மைக்ரோசொப்ட் நிறுவனத்திடமிருந்து இந்தத் தொகுப்பு அனுப்பப்படவில்லை.

**கணினி உலகம்**



ஆனால் கொம்பியூட்டர் தயாரிப் பாளர்கள் இந்த சிஸ்டத்தினை விரும்பிக் கேட்கும் வாடிக்கையாளர்களுக்குப் பதிந்து கொடுக்க அனுமதிக்கப்பட்டது. அது இன்னும் தொடர்கிறது.

இப்போது மீண்டும் எக்ஸ்பிக்கான இறுதிநாள் நீடிக்கப்பட்டுள்ளது.

எனவே தொடர்ந்து எக்ஸ்பி தொகுப் பிற்கான லைசன்ஸ் மைக்ரோசொப்ட் நிறுவனம் வழங்க ஒத்துக்கொண்டுள்ளது.

இது 2009 ஆம் ஆண்டு மே 30 வரை நீடிக்கப்பட்டுள் ளது.

அநேகமாக மே 30 இற்குப் பின் விண்டோஸ் 7 வந்து இடம்பிடிக்கும் என்று மைக்ரோசொப்ட் எதிர்பார்க்கிறது.

# ஊழிக்காலப் பேரழிவை உணர்த்தும் கடும் மழை—பெரும் புயல் 'நிஷா'

24


படங்கள் :-தயாபரன் லக்ஷ்மன்

**"தந்தது உன்தனை கொண்டது என்தனை யார் கொலோ சதுரர்"**

என்பது மணிவாசகப் பெருமானின் திருவாசக வரிகள்.

சைவசமயத்தில் இருக்கக்கூடிய திருமுறைகளில் திருவாசகத்திற்கு இருக்கக் கூடிய பெருமை அது எச்சமயத்தவர்க்கும் பொருத்துடையது, எவரையும் உருகவைக்கக் கூடியது.

இதன் காரணமாகவே மார்கழித்திங்களில் மணிவாசகரின் திருமுறைகளே பாடப்படவேண்டும் என நம் முன்னோர்கள் வகைமைப்படுத்தினர். இந்த வகைமைப் பாட்டால் மார்கழி மாதத்தில் சைவ ஆலயங்களில் தேவாரத் திருமுறை ஓதப்படுவதில்லை. அது மட்டுமன்றி மார்கழி மாதத்தில் இறந்தவர்களின் இறுதிக் கிரியைகளின் போதும் தேவாரம் பாடாமல், திருவாசகமே பாடப்படும்.

இதற்கு மேலாக அந்தக் கிரியையில் மணிவாசகரின் திருவெம்பாவையும் பாடப்படுவது முறையாகும்.

வல்லவர்கள் வகுத்த இந்த ஒழுங்கு முறைக்குள் இருக்கக் கூடிய தெய்வீகம் உய்த்து உணர்தற்குரியவை.

மேற்கூறப்பட்ட திருவாசக வரிகள் சிவபெருமானுடன் மணிவாசகர் பேசிய வார்த்தைகள் .

இறைவா ! உன்னை எனக்குத் தந்து என்னை நீ ஆட்கொண்டாய் , அப்படியானால் இதில் சதுரர்- கெட்டிக்காரரர் யார் நீயா? நானா? .

மணிவாசகரின் புதிருக்கான விடை தெரியாதது போலவே நிஷா வெள்ளம் ஏற்பட்டதும் அதன் பின்னர் நடந்த நிகழ்வுகளும் புரியாத புதிராகவேயுள்ளன.

யாழ்ப்பாணம் கலட்டி வைரவர் கோவிலுக்கு அண்மையில் உள்ள நரிக்குண்டுக் குளத்தில் இப்போது ஒரு சொட்டுத் தண்ணீரும் கிடையாது.நிலம் காய்ந்து போயுள்ளது.

வெள்ளம்- புயல் ஏற்பட்ட போது இந்தக் குளத்தில் ஏற்பட்ட சுழி பலரையும் வியக்கவைத்தது. குளத்திலிருந்து ஊற்றுக் குபீரெனப் பாய்ந்தோடியது. இந்த அதிசயத்தைப் பார்த்த அதே மக்கள் இப்போது குளம் வற்றிப் போயுள்ளதைக் கண்டு ஆச்சரியமடைந்துள்ளனர்.

அதிசயம் ஆனால் உண்மை என்று கூறக்கூடிய விடயமாக இதனைக் குறிப்பிட்டுக்கொள்ளலாம். பொதுவில் மார்கழி மாதத்தில் தேங்கும் வெள்ளம் ஜூன்,ஜூலை மாதத்திலேயே முழுமையாக வற்றிப் போகும். இதுவே வழமை.

ஆனால், முழுமையாக நிறைந்திருந்த நரிக்குண்டுக்குளம் ஒரு மாத காலத்திற்குள் வற்றிப் போனதன் மர்மம் என்ன? **"தந்தது உன் தனை கொண்டது என்தனை யார் கொலோ சதுரர்"** என்ற திருவாசகத்தின் பொருள் தான் இதற்கும் பொருந்துமா? இது பற்றி புவியியலாளர்கள் ஆய்வு செய்வது சாலப் பொருத்துடையது.

மழை வெள்ளம் தாங்க முடியாது எனக் கூறிய நாம் ஆ! என்னே வெய்யில் கொடூரம் என்று கோபம் கொள்ளுமளவிற்கு மாறி மாறி எம்மை வதைப்பது யார்?

இந்தத் தேடல் இல்லாததன் காரணமாகவே நம் மண்ணில் யோகிகளும்-ஞானிகளும் இல்லாமல் போயினர்.

### தாவடியில் வள்ளத்தில் பொருள் ஏற்றப்பட்டது.

வெள்ளத்தால் இரவோடு இரவாக இடம் பெயர்ந்தவர்கள்



எதனையும் எடுக்காமல் வெளியேறத் தொடங்கினர். ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தாலும், அதைப்பற்றி எவரும் பொருட்படுத்தவில்லை.

வெள்ளத்திற்கு இல்லாத ஊரடங்கு எங்களுக்கு மட்டும் எப்படி?

இப்படிக் கேள்வி கேட்டுவிடலாம் என்ற துணிவோடு வெள்ளம் புகுந்த வீடுகளில் இருந்த மக்கள் வெளியேறினர்.

மழையால் வெள்ளமா? அல்லது சுனாமியின் திருவிளையாடலா? என்பதை ஊகிக்க முடியாததால் எந்தப்பொருளையும் எடுக்காது இடம்பெயர்ந்தவர்கள் மறு நாள் வள்ளத்தில் சென்று வீடுகளில் இருந்த பொருட்களை ஏற்றும் பரிதாபத்திற்கு ஆளானார்கள்.


தாவடி உப்புமடத்தடியில் வள்ளத்தில் சென்று அடையாள அட்டை உட்பட வீட்டின் பொருட்களை ஏற்றி வந்த வரலாறு புதுவிதமான உண்மை.

வீட்டிற்குள் வெள்ளம் புகுந்ததனால் வெளியேறியவர்கள் வெள்ளம் வீட்டை ஆக்கிரமிக்கும் என எதிர் பார்த்திருக்கவில்லை.

விடியற்பொழுதில் வீட்டிற்குச் சென்று உடமைகளை எடுத்துக் கொள்ளலாம் என்ற நினைப்பிற்கு வெள்ளம் இம்மியும் இடம் கொடுக்காததால் மழையில் நனைந்த விறைப்பு மேலும் பன்மடங்காகியது.

யாழ்ப்பாண மக்களின் இதயமாக இருக்கக்கூடிய அடையாள அட்டையை எடுக்காமல் வந்தமை எத்துணை ஆபத்தானது.

## வாடகைக்கு வள்ளம்பிடித்து வெள்ளம் கடந்த புதுமை



இறைவா! எம்உயிராகிய அடையாள அட்டை இல்லை எனில் நாம் இருந்தென்ன பலன். அடையாள அட்டையை வீட்டில் வைத்து விட்டு இடம்பெயர்ந்தவர்கள் திருக்காளத்தி கண்ணப்பனின் பக்தி நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

**என்.விஜயன்**

எதுவரினும் வரட்டும் என்ற துணிவோடு பிளாஸ்ரிக் டாங்கொன்றை வாடகைக்கு அமர்த்தி அதில் ஏறி வீடுநோக்கி புறப்பட்டனர்.

ஒன்றில் அடையாள அட்டை அல்லது வீடு பேரின்பம் என்ற முடிவில் வள்ளம் வெள்ளத்தைக் கிழித்துக்கொண்டது. (வளரும்)

## கட்டுநாயக்கவில் தேடுதல்; சந்தேகத்தில் ஆறு பேர் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் நேற்று முன்தினம் மேற்கொள் ளப்பட்ட திடீர் தேடுதலில் சந்தேகத்தின் பேரில் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை அண்மித்த பகுதியில் உலாவித் திரிந்த இவர்கள், தமது அடையாளத்தை உறுதிப் படுத் தத் தவறியமையினால் கைது செய் யப்பட்டனர் என கட்டுநாயக்க பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக கட்டுநாயக்க பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (6)

# இலங்கை தமிழர்கள் இனப்பிரச்சினை தீர்வுக்கு இந்தியா முனைப்புகளை மேற்கொள்ள வேண்டும்

## கொச்சியில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சி மத்தியகுழு கூட்டத்தில் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கைத் தமிழர்கள் இனப்பிரச்சினைக்கு இறுதியும் உறுதியுமான தீர்வுக்கு இந்தியா முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரியுள்ளது.

கொச்சியில் கடந்த 8 ஆம் திகதி முதல் 10 திகதிவரை இடம்பெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இது தொடர்பான விடயம் ஆராயப்பட்டுள்ளது.



இலங்கைத் தமிழர்கள் இனப்பிரச்சினைக்கு மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம்,அரசியல் தீர்வை மறுதலிக்க முடியாது என வலியுறுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சியை படையினர் கைப்பற்றிய பின்னர்,அதனைக் காரணம் காட்டி பேச்சுவார்த்தையைப் பிற்போடுவது ஏற்றுக் கொள்ள முடியாது என இந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்தியா இதற்கான முனைப்புக்களை முன்னெடுக்க வேண்டும் என்றும் இந்தத் தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது.

அத்துடன்,வன்னிப் பிராந்தியத்துக்குள் ஐக்கிய நாடுகள் சபையின் உதவு நிறுவனங்கள் நிவாரணப் பணிகளுக்காக அனுமதிக்கப்படவேண்டும் என்றும் இந்தத் தீர்மானத்தில் கேட்கப்பட்டுள்ளது. (6)

## மன்னார் உப்புக்குளத்தில் சுற்றிவளைப்புத் தேடுதல்

(கொழும்பு)

மன்னார் உப்புக்குளம் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் காலை 10.30 மணி வரை இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து சுற்றி வளைப்புத் தேடுதலினை மேற்கொண்டனர்.

இதன்போது உப்புக்குளம் பகுதியில் உள்ள வீடுகளுக்குச் சென்ற இராணுவத்தினரும் பொலிஸாரும் சோதனை மேற் கொண்டதுடன் குடும்ப உறுப்பினர்களின் அடையாள அட்டைகளையும் பரிசோதனை செய்து கொண்டனர்.

இதேவேளை, உப்புக்குளம் பிரதான வீதியில் பாதுகாப்பு கடமையில் இருந்த இராணுவத்தினர் அப்பகுதியால் வரும் அனைத் துவாகனங்களையும் சோதனைக்குட் படுத்தியதுடன் சந்தேகத்திற்கிடமானவர்களையும் சோதனைக் குட்படுத்தினார். இந்த நடவடிக்கையின் போது எவரும் கைது செய்யப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (6)


## மத்தியின் மகிமை நித்தியம் நிலைக்கும்

யாழ். மத்திய கல்லூரி சிறிய இடைவெளியின் பின் மீண்டும் கல்வி உலகின் நடு நாயகமாக மத்தியில் அமர்ந்து மிளிர்கின்றது.



புதிய அதிபர் திரு. எஸ். ஓங்காரமூர்த்தி அவர்களின் வருகைக்கு ஒளி கூட்டுவதாக க.பொ.தஉயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில் வர்த்தகப்பிரிவு மாணவன் செல்வன் **கைலாசபதி மிதுலன்** அவர்கள் மாவட்டத்தில் முதல் இடத்தைப் பெற்றுள்ளார்.

யாழ். மத்திய கல்லூரி மாணவனும், யாழ். சென்றல் விளையாட்டுக்கழக கூடைப்பந்தாட்ட அணி வீரருமான **சின்னராசா வாகீசன்** க.பொ.த உ.த பரீட்சை வர்த்தகப் பிரிவில் A,2Bபெறுபேறுபெற்றுயாழ்.மத்திய கல்லூரிக்கும் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்.



சி.வாகீசன் A,2B



கை.மிதுலன் 3A

இந்த புனிதம் மிக்க மகிழ்ச்சியான சந்தர்ப்பத்தில் அதிபர் எஸ்.ஓங்காரமூர்த்தி அவர்களை வருக! மத்திய அன்னைக்கு பெருமை சேர்க்க என வாழ்த்தி வரவேற்பதுடன் மாணவர்கள்செல்வன் கை. மிதுலன், செல்வன் சி. வாகீசன் உட்பட யாழ். மத்திய கல்லூரியில் இப்பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மாணவச் செல்வங்களையும் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் பாராட்டுவதில் பெருமைப்படுகின்றது.

சென்றல் இல்லம்,
29,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம்
Jaffna Central Sports Club
(சி/1984)


# தர்மபுரம் வைத்தியசாலையில் நோய் எதிர்ப்பு மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு

(கிளிநொச்சி)

தர்மபுரம் வைத்தியாலையில் சில நோய் எதிர்ப்பு மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதாக கிளிநொச்சி பிராந்திய சுகாதார அத்தியட்சர் டாக்டர் எஸ். சத்தியமூர்த்தி தெரிவித்தார். டாக்டர் சத்தியமூர்த்தி மேலும் தெரிவித்ததாவது,

கடந்த மாதம் பாம்புக் கடியால் பாதிக்கப்பட்ட சுமார் ஐம்பது பேர் சிகிச்சை பெற்றுள் ளனர். கிளிநொச்சி வைத்தியசாலை மூடப் பட்ட பின்னர் தர்மபுரம், விஸ்வமடு, கல்லாறு ஆகிய இடங்களில் வைத்தியசாலைகள் இயங்கி வருகின்றன.

மலேரியா, வயிற்றோட்டம், காச நோய் போன்ற நோய்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

விமானக் குண்டு வீச்சு எறிகணைத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட சுமார் நாற்பது பேர் வரை தர்மபுரம் வைத்தியாசலையில் சிகிச்சை பெற்று வரு கின்றனர் என்றார். (6)


# மரண அறிவித்தல்

## திரு தம்மையா மயில்வாகனம்

### (ஓய்வு பெற்ற ஆயுள்வேத வைத்திய கலாநிதி நயினாதீவு)



நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு தம்மையா மயில்வாகனம் (ஓய்வு பெற்ற ஆயுள்வேத வைத்தியகலாநிதி) அவர்கள் 10.01.2009 சனிக்கிழமை நயினாதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி தம்பையா, நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திரு திருமதி நாகமுத்து செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், திருமகளின் ஆருயிர் கணவனும், அன்னராணி, தவராணி, மகாலட்சுமி (உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திணைக்களம், யாழ்ப்பாணம்), ரோகினிதேவி (ஆசிரியை சிம்மியபாரதி வித்தியாலயம் சுதுமலை) நாகேஸ்வரி (ஜேர்மனி), லெட்சுமிகாந்தன் (லண்டன்), அட்சயதேவி ,ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருநாவுக்கரசு (ஓய்வு பெற்ற காவலர், நயினாதீவு மகாவித்தியாலயம்), பாலசிங்கம் (வர்த்தகர்),மகாலிங்கம் (பூபாலசிங்கம் புத்தகசாலை,யாழ்ப்பாணம்), கணபதிப்பிள்ளை (வர்த்தகர்), மோகனராஜா (ஜேர்மனி), நாகநாதன், (வர்த்தகர்),சபேசினி (லண்டன்),,ஆகியோரின் மாமனாரும், காலஞ் சென்றவர்களான ஆயுள்வேத வைத்திய கலாநிதி சோமசேகரம்,இளைப்பாறிய அதிபர் தியாகராசா,தாமோதரம்பிள்ளை (வர்த்தகர்), சாமியாபிள்ளை (வர்த்தகர்), கணபதிப்பிள்ளை (வர்த்தகர்), இளைப்பாறிய அதிபர் தர்மலிங்கம் மற்றும் ஆயுள்வேத, கலாநிதிகளான கனகசபை கோபால் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி பேரிம்ப நாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியை அவர்களின் உடன் பிறவா சகோதரரும், யோகநாதன் (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகஸ்தர் விவசாயத் திணைக்களம்,மன்னார்), அருணகிருநாதன் (வர்த்தகர்), மணிமேகலை, வைகுந்தவாசன் (சுவிஸ்) ஆகியோரின் மைந்துனரும் மதுஷன், வைஷ்ணவி, மயூரன், கௌதமி, தாட்சாயினி, தட்சனா, யனோசன்,தேவயனா, வரப்பிரகாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 12.01.2009 திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளிற்காக சல்வி பரவை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

2ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

வீ.மகாலிங்கம்-மருமகன்
(பூபாலசிங்கம் புத்தகசாலை)


# ஆனையிறவுக்கு அடுத்து....

(10ஆம் பக்கத்தொடர்ச்சி....)

தலைமையிலான 8ஆவது விஜயபா,லெப்.கேணல் தீபால் புசெல்ல தலைமையிலான 7ஆவது விஜயபா,லெப். கேணல் நளின் ஜெயவர்த்தன தலைமையிலான 6ஆவது இலகு காலாற்படை ஆகிய பற்றாலியன்கள்களம் இறக்கப்பட்டிருந்தன.

மொத்தம் 4 பிரிகேட்களைச்சேர்ந்த 10 பற்றாலியன் காலாற்படை அணிகளோடு கேணல் ரால்ப் நுகேராவைத் தளபதியாகக்கொண்ட இயந்திர காலாற்படைபிரிகேட்டும் நேரடியாக இந்த முன்னகர்வில் பங்கேற்றிருந்தது.

இந்த முன்னகர்வின் ஆரம்பத்தில் புலிகள் சிறியளவில் சண்டையிட்ட போதும் பின்னர் அவர்கள் செம்பியன்பற்று பக்கமிருந்து ஆட்டிலறி, மோட்டார் தாக்குதல்களை நடத்திய படியே பின் வாங்கினர்.

இந்தச் சண்டைகளின் போது படையினர் தரப்பில் 12 பேர் கொல்லப்பட்டு 55பேர் வரைகாயமுற்றதாக தெரிகிறது.இவர்களில் பலர் பொறி வெடிகளிலேயே சிக்கியுள்ளனர்.

இந்த நடவடிக்கையில் படையினர் சந்தித்த மிகப் பெரிய இழப்பு55ஆவது டிவிசனின்எயர் மொபைல் பிரிகேட்டைச்சேர்ந்த 5ஆவது கெமுனுவோச்கட்டளை அதிகாரியான லெப்.கேணல் நளிந்த குமாரசிங்ககொல்லப்பட்டதாகும்.

கிளாலிக் கரையோரமாக முன்னேறிய தனது படையினரை வழி நடத்திக் கொண்டிருந்த அவர் தனது கட்டளை வாகனத்தில் (லான்ட்றோவன்ஜீப்) புலோப்பளைப் பகுதியில் சென்று கொண்டிருந்த போது கடந்த 8ஆம் திகதி காலை 9.20 மணியளவில் புலிகளின் பொறிவெடியில் சிக்க நேரிட்டது.

குறுகிய வீதியொன்றின் வளைவில் மழையினால் சேறாகியிருந்த பகுதியை விலத்தி இவரது வாகனம் செல்ல முற்பட்ட போதே கண்ணி வெடியில் சிக்கியது.

இந்தச் சம்பவத்தில் லெப். கேணல் நலிந்தகுமாரசிங்கவும் அவரது தொலைத் தொடர்பு உதவியாளரான சிக்னல் படைப்பிரிவின் அதிகாரியும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். மெய்க் காவலர்கள் இருவரும் படுகாயமடைந்தனர்.

நான்காவது கட்ட ஈழப்போரில் வட போர் முனைச் சண்டையில் கொல்லப்பட்ட உயரதிகாரிஇவரேயாவார். அவருக்கு மரணத்தின் பின்னர் கேணலாகப் பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது.

ஆனையிறவின் வீழ்ச்சியைஅடுத்து புலிகள் முற்றுமுழுதாக இப்போது சுண்டிக்குளம் கடல் நீரேரிக்கும் முல்லைத்தீவுக்கும் இடைப்பட்ட கடலோரப்பகுதி மற்றும் முரசுமோட்டை,அம்பகாமம்,கற்சிலைமடு, வற்றாப்பளை பிரதேசங்களுக்கு உட்புறமாகவும் முடக்கப்பட்டிருக்கின்றனர்.

புலிகளைச் சிறிய நிலப்பரப்புக்குள் முடக்குவதில் வெற்றி கண்டிருக்கின்ற இராணுவத்தின் முயற்சி அடுத்த கட்டமாக அவர்களை முற்றாக அழிக்கின்ற நிலைக்கு மாற்றமடையப் போகிறது.

இந்தக் கட்டத்தில் புலிகளின் அடுத்த கட்ட நிலைப்பாடு, நகர்வுகள் எத்தகையதாக இருக்கும் என்ற கேள்விக்குவிடை பகரும் நிலையில் எவரும் இல்லை.

# 2100 ஆம் ஆண்டுக்குள் வெப்பத்தால் உலகில் அரைப்பங்கினர் பட்டினியில் வாடும் அபாயம்

## அமெரிக்க விஞ்ஞானிகள் எச்சரிக்கை

காலநிலை மாற்ற அச்சுறுத்தல்கள் காரணமாக 2100 ஆம் ஆண்டுக்குள் உலக சனத்தொகையில் அரைப் பங்கினர் உணவு நெருக்கடிகளை எதிர்கொள்ளவுள்ளதாக அமெரிக்க விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

வோஷிங்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் டேவிட் பட்டிஸ்தியின் இந்த ஆய்வின் முடிவுகள் சயன்ஸ் விஞ்ஞான சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளன.

வெப்பமான கால நிலைகள் காரணமாக உலகத்தில் விளைச்சல் பாதிக்கப்படுவதால் உலகளாவிய ரீதியில் பாரிய உணவுப் பற்றாக் குறையை எதிர்கொள்ள நேரிடும் என டேவிட் பட்டிஸ்தி தெரிவித்தார்.

கடந்த அரை நூற்றாண்டிலான 23 கால நிலை மாற்ற மாதிரிகளைக் கணித்தே விஞ்ஞானிகள் இந்த ஆய்வுப்பெறு பேறுகளை வெளியிட்டுள்ளனர்.

உலக உணவு உற்பத்தியானது வெப்ப நிலையால் மட்டும் பாரிய பாதிப்பொன்றை எதிர்கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இக்க ணிப்பீட்டில் உயர் வெப்பநிலையால் விளைச்சலுக்கான நீர் விநியோகத்தில் ஏற்படக் கூடிய பற்றாக்குறைகள் உள்ளடக்கப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வெப்ப வலய நாடுகளில் உயர் வெப்ப நிலை காரணமாக அரிசி மற்றும் சோளம் ஆகிய பிரதான தானிய விளை நிலங்கள் 20 சதவீதம் தொடக்கம் 40 சதவீதம் வரை குறையலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வட ஐரோப்பாவில் கடந்த 2003 ஆம் ஆண்டு ஜூன்,ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் உயர் வெப்பநிலை காரணமாக 52ஆயிரம் பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது. (6)

## ஒசாமாவை பிடிக்கும் முயற்சியில் அமெ. ஒருபோதும் பின்வாங்காது

உலக நாடுகளுடன் இணைந்து பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் அமெரிக்கா தொடர்ந்து போராடும் என்றும் பயங்கரவாதத்தை எந்த நிலையிலும் அனுமதிக்க கூடாது எனவும் அமெரிக்க வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஸ்காட் ஸ்டான்செல் கூறியுள்ளார்.

அவர்மேலும் தெரிவித்தாவது, அல்-குவைதா பயங்கரவாத இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடனை பிடித்தே தீருவோம். இந்த முயற்சியில் அமெரிக்கா ஒருபோதும் பின்வாங்காது எனவும் பாகிஸ்தானில் பதுங்கியிருந்த அல் குவைதா -2 முக்கிய தலைவர்கள் மீது அமெரிக்கப் படையினர் நடத்திய வான்வெளித்தாக்குதலில் அவர்கள் இருவரும் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (6)

## பாகிஸ்தான் மீது போர் தொடுக்க இந்தியா முயலக்கூடாது

### -முஷாரப் தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)

மும்பை தாக்குதல் சம்பவத்தின் எதிரொலியாகப் பாகிஸ்தான் மீது போர் தொடுக்க இந்தியா முயலக்கூடாது என பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

இந்தியா அதிரடியாக போர் தொடுக்குமானால் பதிலடி கொடுக்க பாகிஸ்தான் தயாராகவே உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.சொற்பொழிவு நடத்துவதற்காக அமெரிக்கா செல்வதற்கு முன் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் மேலும் கூறியதாவது,

மும்பை தாக்குதல் சம்பவத்தால் இந்தியா-பாகிஸ்தான்இடையே போர் பீதி ஏற்பட்டுள் ளது .



அச்சுறுத்தும் வகையில் அறிக்கைகளை வெளியிடுவதால் பதற்றம் தான் அதிகரிக்கும். அரசியல் ஆதாயத்துக்காக இந்தியா இது போன்ற செயல்களில் ஈடுபடுவது சரியல்ல என்றார். (6)


## காஸா தாக்குதலுக்கு எதிராக இலண்டனில் கண்டனப்பேரணி

(இலண்டன்)

காஸாவில் இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதலைக் கண்டித்தும் உடனடி போர் நிறுத்தம் கோரியும் லண்டனில் பெருந்திரளானோர் கலந்து கொண்டுள்ள கண்டனப் பேரணி நடத்தப்பட்டது.

யுத்தத்திற்கு எதிரான அமைப்புக்களும் பிரிட்டிஷ் முஸ்லிம் அமைப்புக்களும் பாலஸ்தீன ஆதரவு குழுக்களும் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்திருந்தன.

நகரின் முக்கியப் பூங்காவில் ஆரம்பித்து இஸ்ரேலிய தூதரகம் வரையிலும் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடந்துள்ளது. (6)



## போர் குற்றங்களை ஆய்வு செய்ய காஸாவுக்கு ஐ.நா.குழுவை அனுப்ப வலியுறுத்தல்

போர் குற்றங்களை நேரடியாக ஆய்வு செய்யகாஸா பகுதிக்கு ஐ.நா குழுவை அனுப்ப வேண்டாம் என மனித உரிமைகளுக்கான ஐ.நா. தூதர் நவநீதம்பிள்ளை வலியுறுத்தியுள்ளார்.

எகிப்து, அரபு நாடுகள், கியூபா, பாகிஸ்தான்,இஸ்லாமிய மாநாடு ஆகியன கேட்டுக் கொண்டதற்கிணங்க, ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புக் கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் நவநீதம்பிள்ளை பேசியதாவது, காஸாப் பகுதியில் தற்போது நிலவிவரும் சூழ்நிலை சகித்து கொள்ளமுடியாதது . போரை நிறுத்த வேண்டும் என்ற ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சில் தீர்மானத்தை உடனே அமுல்ப் படுத்த வேண்டும்.

தாக்குதலில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பது, மருத்துவ ஊழியர்கள், மருத்துவமனைகள், அம்புலன்ஸுகளைத் தாக்காமல்இருப்பது போன்றவற்றில் இரு தரப்புமே கவனம் செலுத்த வேண்டும் என்றார். (6)

## பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்காவிட்டால் இந்தியா மேலதிக நடவடிக்கை எடுக்கும்

### பிரணாப் முகர்ஜி தெரிவிப்பு



கடந்த நவம்பர் மாதம் மும்பையில் நடந்த பங்கரவாதத் தாக்குதலில் சதித் திட்டம் தீட்டியவர்களை பாகிஸ்தான் சட்டத்தின் முன் நிறுத்தவில்லை என்றால் இந்தியா மேலதிக நடவடிக்கைகளை எடுக்கும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியுள்ளார்.

பாகிஸ்தானிடம் ஆதாரங்கள் அடங்கிய ஆவணங்களைஇந்தியா கையளித்துவிட்டது என்று பாகிஸ்தான் அரசு அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் என்று இந்தியா எதிர்பார்க்கிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

மும்பையில் தாக்குதல் நடத்தியவர்களுக்கு பாகிஸ்தானின் அரசு நிறுவனங்களுடைய ஆதரவு இருந்திருக்கத்தான் வேண்டும் என்று இந்தியா வலியுறுத்துவதை பாகிஸ்தான் நிராகரித்துள்ளது. . (6)

## காஸா பொதுமக்களுக்கு இஸ்ரேல் எச்சரிக்கை

(லண்டன்)

காஸாவில் உள்ள பொது மக்கள் ஹமாஸ் பயன்படுத்தும் கட்டிடங்கள் அருகே செல்ல வேண்டாம் எனஇஸ்ரேல் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் தொலைபேசி மூலமாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதன்மூலம் பாலஸ்தீனதீவிர வாதிகளுக்கு எதிராக இஸ்ரேல் புதிய சண்டை யுக்தியை பயன்படுத்தலாம் என்ற பலத்த யூகம் நிலவுகிறது.

இதற்கிடையே வடக்கு காஸாவில் ஜபல்யா வீதியில் இஸ்ரேலின் எறிகணை தாக்குதலில் எட்டு பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக மருத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு வாரமாக நடைபெறும் மோதலில் எண்ணூறுக்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதாகஅவர்கள் கூறியுள்ளனர். இதில் பதின்மூன்று இஸ்ரேலியர் களும்கொல்லப்பட்டுள்ள னர். இவர்களில் பெரும்பாலானோர் இராணுவத்தினர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (6)

## கடற் கொள்ளையர்களால் கடத்தப்பட்ட எண்ணெய் கப்பல் விடுவிப்பு

(துபாய்)

சோமாலிய கடற் கொள்ளையர்களால் கடந்த நவம்பர் மாதம் கடத்தப்பட்ட சவுதி அரேபிய நாட்டைச் சேர்நத சீரியஸ் ஸ்டார் என்றஉலகின் மிகப் பெரிய எண்ணெய் கப்பலை கொள்ளையர்கள் விடுவித்தனர்.



கடத்தப்பட்ட சரக்கு கப்பலில் இருந்த துப்பாக்கி ஏந்திய கொள்ளைக்காரர்கள் கப்பலை விட்டு சென்று விட்டதாக மொகாதிஷூ பகுதி கடற் கொள்ளையர்கள் தெரிவித்தனர். ஆனால் சரக்குக் கப்பலை விடுவிக்க பணயத் தொகை ஏதேனும் கொடுக்கப்பட்டதா என்பது பற்றிக் கூறவில்லை.

அரபு நியூஸ் என்ற பத்திரிகையில் இந்த செய்தியை உறுதிசெய்துள்ளது.

400 கோடி ரூபாய் மதிப்புள்ள கச்சா எண்ணெயுடன் இந்தக் கப்பல் கடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (6)

## பிஜிரில் கடும் புயல் வெள்ளத்தில் ஆறுபேர் பலி

சூவா)

பிஜியில் கடும்புயல் மழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் அந் நாட்டு அரசு அவசர நிலையை பிரகடனம் செய்துள்ளது.

புயல், மழைக்கு இதுவரை 6பேர் பலியாகியுள்ளதாக பிஜியில் இருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன.

ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளைவிட்டுவெளியேறியுள்ளனர். ஆற்றின் கரைகள் உடைந்து வருவதால் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

விமான நிலையத்திற்குச் செல்லும் ஒரே சாலை வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் டேணரவு தீவுக்கு சுற்றுலா சென்றவர்கள் வெளியேற முடியாமல் அத்தீவில் சிக்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேசியப் பேரழிவு நிர்வாக அலுவலகத்தின் பரிந்துரையின் பேரில் அவசர நிலையை இடைக்கால பிரதமர் வோரேக் பைனிமராமா பிரகடனம் செய்துள்ளதாக இடைக்கால தேசிய பாதுகாப்பு எபெலி கானிலாவ் தெரிவித்தார். (6)

# ஆனையிறவுக்கு அடுத்து என்ன?

யாழ்ப்பாணத்துக்கான தரைவழிப் பாதையானது ஏ-9 வீதி கடந்த வெள்ளியன்று முழுமையாகப் படையினரின் கட்டுப்பாட்டில் வந்திருக்கிறது.

1985ஆம் ஆண்டு புலிகள் முதல் முறையாக யாழ்ப்பாணக் குடாநாட்டைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்த பின்னர் ஏ-9 வீதி மீதான கட்டுப்பாட்டை படையினர் இழந்தனர்.

1987ஆம் ஆண்டு இந்தியப் படையினர் இந்த வீதியைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்ததையடுத்து யாழப்பாணத்துக்கும் தென்னிலங்கைக்கும் இடையிலான போக்குவரத்து நடைபெற்று வந்தது.

ஆனால், 1990ஆம் ஆண்டு இரண்டாம் கட்ட ஈழப்போரின் பின்னர் இந்த வீதி ஆனையிறவில் இருந்து தாண்டிக்குளம் வரைக்கும் இயக்கச்சியில் இருந்து யாழ்ப்பாணம் வரைக்கும் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் சென்றது.

பின்னர் ஒரு கட்டத்தில் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் வரையிலும் மாங்குளத்தில் இருந்து தெற்கேயும் ஏ-9 வீதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து விடுபட்டு இராணுவத்தினரின் வசம் சென்றிருந்தது.

ஆனால், ஓயாத அலைகள் படை நடவடிக்கைகளின் மூலம் இந்தப் பகுதிகள் புலிகளால் கைப்பற்றப்பட்டதை அடுத்து 2000ஆம் ஆண்டில் முகமாலை தொடக்கம் ஓமந்தை வரையிலான ஏ-9 வீதி புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.



ஏ-9 வீதியில் முன்னேறும் படையினரை வழி நடத்திச் செல்லும் 53ஆவது டிவிசன் தளபதி பிரிகேடியர் கமால் குணரட்ண 55ஆவது டிவிசன் தளபதி பிரிகேடியர் பிரசன்ன சில்வா.

இப்போது யாழ்ப்பாணத்துக்கும் தென்னிலங்கைக்கும் இடையிலான ஏ-9 வீதி முழுமையாகப் படையினரின் கட்டுப்பாட்டில் வந்திருக்கிறது.

இது இலங்கையின் வரலாற்றில் மிகவும் முக்கியமானதொரு நிகழ்வு. ஈழப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் முதல் தடவையாக இலங்கை இராணுவம் இப்போது தான் ஏ-9 வீதியின் ஒவ்வொரு அங்குலத்தையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருக்கிறது.

வடபோர் முனையில் புலிகள் கிளாலி தொடக்கம் நாகர்கோவில் வரை அமைத்திருந்த வலுவான பாதுகாப்பு அரண்களை உடைத்து ஆனையிறவைக் கைப்பற்ற கடந்த 2001ஆம் ஆண்டிலும் 2006முதல் 2008ஆம் ஆண்டு வரையிலும் பல இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால், அந்த இராணுவ நடவடிக்கைகள் அனைத்தும் முற்றிலும் தோல்வி கண்டது குறிப்பிடத்தக்கது. புலிகளின் வலுவான தாக்குதல் அணிகளின் உக்கிரமான எதிர் தாக்குதல்களும் குறுகிய பிரதேசத்துக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருந்த போர்முனை அவர்களுக்குச் சாதகமாக இருந்ததாலும் படைத்தரப்பால் வடபோர் முனையில் இருந்து முன்னகர முடியாத நிலையே காணப்பட்டது.

ஆனால், மன்னார்ப் பகுதியில் இருந்து மேற்குக் கரையோரத்தால் முன்னேறி பூநகரியைக் கைப்பற்றிய 58ஆவது டிவிசன் படையினர் ஆனையிறவின் தென்பகுதியைக் கைப்பற்றிய பின்னரே வட போர் முனையில் இருந்து முன்னேறும் நடவடிக்கையை மேற்கொள்ள முடிந்தது.

பரந்தன் சந்தியின் வீழ்ச்சியை அடுத்து ஆனையிறவுக்கும் முகமாலைக்கும் இடையில் தமது கட்டுப்பாட்டில் இருந்த தென்மராட்சி மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதிகளின் பாதுகாப்பை புலிகளால் உறுதிப்படுத்த முடியாதென்பது முன்கூட்டியே அனுமானிக்கப்பட்ட தொன்றாகவே இருந்தது.

காரணம் பரந்தன் சந்தி ஒரு முக்கியமான கேந்திர நிலையாகும் . பரந்தன் சந்தியின் கட்டுப்பாட்டை எடுத்துக்கொள்ளும் தரப்பினால் ஆனையிறவினதும் அதற்கு வடக்கே உள்ள பகுதிகளிலும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்த முடியும்.

அதிலும் புலிகளைப் பொறுத்தவரையில் இப்போது சாதகமற்ற களமுனைகளில் சண்டைகளைத் தவிர்த்து முல்லைத்தீவை நோக்கி தமது வளங்களை ஒன்று குவித்து வரும் நிலையில் முகமாலை முன்னரங்கில் நிலைத்து நிற்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாதிருந்தது.

இதனால், ஆனையிறவினது வீழ்ச்சியும் ஏ-9 வீதியின் கட்டுப்பாட்டைப் படையினர் எடுத்துக்கொள்வதும் மிகச் சுலபமாக நடந்தேறும் என்பது பொதுவாக எதிர்பார்க்கப்பட்டு வந்தது.

இது படையினருக்கு பெரும் உளவியல் உற்சாகத்தை கொடுக்கக்கூடியதொன்றாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

முன்னெப்போதும் இல்லாத வகையில் படையினருக்கான விநியோகப்பாதை திறக்கப்படும் சூழல் தோன்றிருப்பதால் யாழப்பாணம் மீதான பாதுகாப்பு அச்சுறுத்தல் என்பது முற்றுமுழுதாக நீக்கப்பட்ட நிலையே காணப்படுகிறது.

1991ஆம் ஆண்டு புலிகள் முதல் தடவையாக ஆகாய- கடல்- வெளி தாக்குதல் என்ற பெயரில் ஆனையிறவைக் கைப்பற்ற முயற்சி எடுத்தனர்.

ஜூலை 10ஆம் திகதி ஆரம்பித்த இந்த முற்றுகைச் சமரின் தொடக்கத்தில் ஆனையிறவில் இருந்த 6ஆவது சிங்க றெஜிமென்டின் பிரதிக்கட்டளை அதிகாரியான மேஜர் லலித் புத்தாஸ உள்ளிட்ட பல படையினர் கொல்லப்பட்டனர்.

ஆனாலும், மேஜர் சனத் கருணாரட்ணவின் (இவர் இப்போது மேஜர் ஜெனரலாக பதவி வகிக்கிறார்) தலைமையிலான அந்த பற்றாலியன் ஒரு மாத முற்றுகையை தாக்குப்பிடித்து நிலைகொள்ள பிரிகேடியர் டென்சில் கொப்பேகடுவவின் வழிகாட்டலில் வெற்றிலைக்கேணியில் தரையிறக்கப்பட்ட படையினர் இந்த.முகாமை மீட்டனர்.

பலவேகய-1 எனப் பெயரிடப் பட்ட இந்த நடவடிக்கைக்கு அப்போதைய யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக இருந்த பிரிகேடியர் விஜய விமலரட்ண தலைமையேற்றிருந்தார்.

கேணல் நளின் அங்கம்மன (இவர் பின்னர் மட்டக்களப்பில் புலிகள் கண்ணி வெடித்தாக்குதலில் பலியானார் .) தலைமையிலான 7ஆவது பிரிகேட், கேணல் அன்ரன் விஜேந்திரா தலைமையிலான இவர் மேஜர் ஜெனரலாகப் பணியாற்றி இப்போது ஓய்வு பெற்று விட்டார். 3ஆவது பிரிகேட் , கேணல் சரத் பொன்சேகா (இப்போதைய இராணுவத்தளபதி தலைமையிலான 1ஆவது பிரிகேட் என்று 3 பிரிகேட் படையினர் தரையிறக்கப்பட்டே புலிகளின் தாக்குதல்களை முறியடித்து ஆனையிறவை மீட்க முடிந்தது.



ஆனையிறவில் படையினர்

இந்த நடவடிக்கையில் 1ஆவது, 3ஆவது, 4ஆவது சிங்க றெஜிமென்ட், 3ஆவது , 4ஆவது கஜபா றெஜிமென்ட், 1ஆவது இலகு காலாற்படை, 6ஆவது இலகு காலாற்படை, 4ஆவது ஆட்லறி றெஜிமென்ட் உள்ளிட்ட இராணுவத்தின் முன்னணிப் படைப்பிரிவுகளைச் சேர்ந்த 10 ஆயிரம் படையினர் பங்கேற்றிருந்தனர்.

இந்தச் சண்டையின் போது புலிகள் தரப்பில் 573 பேர் உயிரிழந்ததை உறுதிப்படுத்தியிருந்தனர். அதேவேளை படைத்தரப்பில் 202 பேர் கொல்லப்பட்டதாக இராணுவத்தரப்பு கூறியிருந்தது. ஆனால் அதைவிட அதிகம் என்று சொல்லப்பட்டது.

இதன் பின்னர் 1992ஆம் ஆண்டு ஜூலையில் கிட்டத்தட்ட ஒரு வார காலம் மேற்கொள்ளப்பட்ட பலவேகய -2 நடவடிக்கையின் மூலம் இராணுவத்தரப்பு ஆனையிறவின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியது.

இதன் மூலம் இயக்கச்சி முதல் வெற்றிலைக்கேணி வரையான பகுதிகள் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டன.

பின்னர் சத்ஜய மூலம் கிளிநொச்சி வரை முன்னேறி படையினர் ஆனையிறவின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி யாழ்ப்பாணம் வரைக்குமான தரைவழிப்பாதையைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில் 1997ஜனவரி 9ஆம் திகதி அதிகாலை புலிகள் பாரியதொரு தாக்குதலை மேற்கொண்டனர்.

பரந்தனுக்கும் ஆனையிறவுக்கும் இடையில் புகுந்து புலிகள் நடத்திய ஒரு அழித்தொழிப்புச் சமரில் படையினருக்கும் பாரிய உயிரழிவுகளையும் ஆயுத தளபாட அழிவுகளையும் ஏற்படுத்தியிருந்தனர்.

இந்தச் சண்டையில் 11 ஆட்டிலறிகளையும் 5 கனரக மோட்டார்களையும் படையினர் இழந்ததுடன் பல டாங்கிகள் ஆயுதக்கிடங்குகளும் புலிகளால் அழிக்கப்பட்டிருந்தன.

300இற்கும் அதிக படையினர் இந்தச் சமரில் கொல்லப்பட்டதாகவும் 197புலிகள் உயிரிழந்ததாகவும் கூறியிருந்தனர். 223 படையினர் கொல்லப்பட்டதாக படை வட்டாரங்கள் கூறியிருந்த போதும் கொல்லப்பட்ட காணாமற்போன படையினரின் எண்ணிக்கை அப்போது சரி வர உறுதிப்படுத்தப்படவில்லை.

இதற்குப் பின்னர் ஆனையிறவைக் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்புலிகள் பரந்தன் வெற்றிலைக்கேணி என்று அதன் சிறகுகளை ஒடித்தனர். குடாரப்புவில் ஒரு தரையிறக்கத்தைச் செய்து இயக்கச்சியில் விநியோகத்தை துண்டித்து புலிகள் நடத்திய மிகப் பெரிய தாக்குதல் சர்வதேச ரீதியில ;வியப்புடன் பார்க்கப்பட்ட தொன்று.

2000 ஏப்ரல் 22ஆம் திகதி ஆனையிறவு வீழ்ச்சி கண்ட போது படைத் தளத்தின் பிரதிக்கட்டளை அதிகாரியான பிரிகேடியர் பேர்சி பெர்னாண்டோ மற்றும் பிரிகேட் தளபதிகளான பிரிகேடியர் பகத்திய ஜெயத்திலக, கேணல் ஹரிஸ் ஹேவாராச்சி, கேணல் நீல் அக்மீமன உள்ளிட்ட 359 படையினர் கொல்லப்பட்டதாகவும் 349 படையினர் காணாமற்போனதாகவும் மேலும் 2500 படையினர் காயமுற்றதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இப்போது ஆனையிறவுத்தளத்தின் தென்பகுதியை பிரிகேடியர் சவீந்திர சில்வாவின் 58ஆவது டிவிசன் கைப்பற்றியதைஅடுத்து வடக்கில் இருந்து முன்னேறி வந்த 53, 55ஆவது டிவிசன்கள் ஆணையிறவின் வட பகுதியைக்கைப்பற்றி இணைப்பை ஏற்படுத்தியிருக்கின்றன.

யாழ். படைத் தலைமையகத்தில் புதிய தளபதியாகக் கடந்த 4ஆம் திகதி பதவியேற்ற மேஜர் ஜெனரல் மெந்தக சமரசிங்கவின் வழிகாட்டலிலேயே இந்த நடவடிக்கை இடம் பெற்றிருக்கிறது.

பிரிகேடியர் கமால் குணரட்ணவின் தலைமையில் 53ஆவது டிவிசனின் இரு பிரிகேட்கள் ஏ-வீதிக்கு வலப்புறமாக முன்னேறி வந்தன.

பிரிகேடியர் பிரசன்ன சில்வாவின் தலைமையில் 55ஆவது டிவிசன் ஏ-வீதிக்கு இடப் புறமாக முன்னேறியது. ஆனால், கரையோரமாகநாகர் கோவிலில் இருந்து எந்த நகர்வும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

53ஆவது டிவிசனின் கேணல் சாந்த திசநாயக்க தலைமையிலான எயர் மொபைல் பரிகேட்டில்-மேஜர் சனத் திசநாயக்கதலைமையிலான 1ஆவது விஜயபா, லெப். கேணல் நலிந்தகுமாரசிங்க தலைமையிலான 5கெமுனுவோச் ஆகியபற்றாலியன்கள் களம் இறக்கப்பட்டிருந்தன.

லெப்.கேணல் ஜெயநாத் தலைமையிலான53-3ஆவது பிரிகேட்டைச் சேர்ந்த லெப்.கேணல் சனத் அலுவிகார தலைமையிலான1ஆவது கஜபா ,மேஜர் கல் பசஞ்சீவ தலைமையிலான 5ஆவது விஜயபா ஆகிய பற்றாலியன்கள் இன்னொருஅணியாக முன்னேறின.

**சுபத்ரா**

அதே வேளை 55ஆவது டிவிசனின் லெப் கேணல் வசந்த அப்ரூ தலைமையிலான 55-1 பிரிகேட்டைச் சேர்ந்த மேஜர் சந்தன ரண வீர தலைமையில்1ஆவது இலகு காலாற்படையும், லெப்.கேணல் அஜந்த விஜேசூரிய தலைமையிலான 1 ஆவது கெமுனுவோச்சும் முகமாலைப் பகுதியில் களமிறங்கின.

இதற்கடுத்து கேணல் மஹிந்த விஜேயசூரிய தலைமையிலான 53-3ஆவது பிரிகேட்டைச் சேர்ந்த மேஜர்உபுல்செனரத் தலைமையிலான 4ஆவது கெமுனுவோச் , லெப்கேணல்நளின் கொஸ்வத்த

(12ஆம் பக்கம் பார்க்க....)

எதுவும் தானாக வருவதில்லை ; நல்லது எதுவும் நிச்சயமாக வருவதில்லை ; எல்லாவற்றையும் நாமே கொண்டுவரவேண்டும்.

~ சி.பர்ட்டன்

வலம்புரி

# எவரும் கவனிக்காத யாழ்ப்பாண வாகன நெருக்கடி

யாழ்ப்பாணத்தில் வாகன நெருக்கடியின் தொல்லை தாங்கமுடியாதென்றாகிவிட்டது. யாழ் நகரப்பகுதியில் மட்டுமன்றி அதனை அண்டிய பகுதிகளிலும் இந்த வாகன நெருசலை அனுபவிக்கவேண்டியுள்ளது.

வாகன நெருக்கடி ஏற்படுவதன் விளைவாக விபத்துக்கள் தாராளமாகும் வாய்ப்புக்கள் நிறையவேயுண்டு. வீதிகளின் நெருக்கம், வீதித்தடை, பொறுப்பற்ற வாகன சாரதிகள், கையடக்கத்தொலைபேசியில் உரையாடிய வாறு மோட்டார் சைக்கிள்களில் பயணிக்கும் இளைஞர், யுவதிகள் ஆகியோரினால் வாகன நெருசல் மேலும் வலுவடைகின்றது.

இதே நேரம் யாழ். நகர மையத்திற்கு செல்லும் கே.கே.எஸ் வீதி தற்போது ஒருவழிப் பயணமாக் கப்பட்டுள்ளது. யாழ்.நகரப் பகுதியில் இருந்து வெளியேறுவதற்காக கே.கே.எஸ் வீதியின் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. யாழ். சத்திரத்துச் சந்தி–முட்டாஸ் கடைச்சந்தி வரையான கே.கே:எஸ் வீதியின் ஒடுக்கம், வர்த்தக நிலையங்களின் நெருக்கம் என்பவற்றின் அடிப்படையில் அந்த வீதியை ஒருவழிப் பயணமாக்கியமை ஏற்புடையது. ஆனால் கே.கே.வீதிக்குச் சமாந்தரமாகச் செல்லும் கஸ்தூரியார் வீதி இருவழிப் பயணம் உடையதாக இருப்பதால் அங்கு வாகன நெருசல் அதிகமாக காணப்படுகிறது.

கே.கே.எஸ் வீதியை ஒரு வழிப் பாதையாக்கி விட்டு கஸ்தூரியார் வீதியை இருவழிப் பயணமாக்கினால் நிலைமை மோசமாகும் என்பது தெரிந்த விடயமே.

எனவே கஸ்தூரியார் வீதியை ஒருவழிப் பயணமாக்குவதுடன் வெலிங்டன் சந்தி வரையான மணிக்கூட்டுக்கோபுர வீதியை முழுமையாகத் திறந்து ஸ்ரான்லி வீதியால் யாழ். நகரை சென்றடைவதற்கான ஒழுங்கு செய்வது முக்கியமானதாகும்.

இவ்விதம் வீதிகளை ஒழுங்குபடுத்தும் அதேநேரம், தனியார் மினிபஸ்கள் மற்றும் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் பயணிகளை ஏற்றி இறக்குவதில் எந்த ஒழுங்கையும் கடைப்பிடிப்ப தில்லை.

திடீர் திடீரென பஸ் வண்டிகளை நிறுத்தி பயணிகளை ஏற்றுவதால் வீதிகளில் வாகன நெருசல் ஏற்படுகின்றது.

எனவே அங்கீகரிக்கப்பட்ட பஸ் தரிப்பிடம் தவிர்ந்த வேறு இடங்களில் வைத்து பயணி களை ஏற்றி இறக்குவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் நடைமுறைப் படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாண வாகன நெருசலை குறைக்கமுடியும்.

# ஊடகத்துறை மீதான வன்முறைகள் அனைத்துலகத்திடம் முறையிட ஐ.தே.க.முடிவு

இலங்கையில் மோசமடைந்துவரும் ஊடகத்துறையினர் மீதான வன்முறைகள் தொடர்பாக அனைத்துலக அமைப்புக் களிடம் முறையிடுவதற்கு எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன், அணிசேரா நாடுகளின் நாடாளுமன்றக்குழு, ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு, மனித உரிமை கண் காணிப்பகம், அனைத்துலக சுதந்திர ஊடகவியலாளர் அமை ப்பு உள்ளிட்ட அனைத்துலக அமைப்புக்களிடம் முறையிடு வதற்கே ஐ.தே.க. தீர்மானித்துள்ளது.

சிரச தொலைக்காட்சி மீதான தாக்குதல், சண்டே லீடர் வார ஏட்டின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை போன்றவை தொடர்பாக அரசாங்கம் கண்டனங்களைத் தெரிவித்துள்ளபோதும் விசாரணைகளை நடத்துமுற் படவில்லை என ஐ.தே.கவின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எனவே இது தொடர்பாக அனைத்துலக அமைப்புக் களுடன் தொடர்புகொள்ளுமாறு ஐ.தே.கவின் மனித உரி மைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ செயலாளர் ஜயலத் ஜெயவர்த்தனாவை பணித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே லசந்த விக்கிரமதுங்கவின் இறுதி நிகழ்வுகள் நிறைவுபெற்றதும் அனைத்துலக அமைப் புக்களுடன் தொடர்புகளை மேற்கொள்ளவுள்ளதாக ஜயலத் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ந-5)

# புலிகளுக்கு உதவியதாக குற்றஞ்சாட்டப்பட்ட கனேடிய இளைஞர் அமெரிக்காவிற்கு நாடு கடத்துவது தற்காலிகமாக ஒத்திவைப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களைப் பெற்றுக் கொடுக்கும் வலையமைப்புடன் தொடர்பு கொண்டிருந்ததாக குற்றம் சுமத்தப்பட்ட கனேடிய இளைஞர் ஒருவர் அமெரிக் காவுக்கு நாடு கடத்தப்படுவது தற்காலிகமாக ஒத்திவைக் கப்பட்டுள்ளது. 31 வயதான மயில்வாகனம் ரமணன் நாடு கடத்தல் உத்தரவையடுத்து கைது செய்யப்பட்டிருந்தார். எனினும் அவர் மேன் முறையீடு செய்ததையடுத்து பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அவரின் மனுமீதான விசாரணைக்கு திகதி குறிப்பதற்குக்கூட பல மாதங்கள் தேவைப்படும் என கனேடிய நீதித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

1992 ஆம் ஆண்டு இலங்கையில் இருந்து கனடாவுக்குச் சென்ற மயில்வாகனம் ரமணன், வாட்டர்லூ பல்கலைக் கழகத்தின் கணனிப்பொறியியல்துறை மாணவராவார். அமெரிக்க மற்றும் கனேடியப் பொலிஸார் மேற்கொண்ட புலனாய்வு விசாரணைகளைத் தொடர்ந்து 22.08.2006 ஆம் திகதி அவர் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 2006 ஆம் ஆண்டின் இறுதியில் வொஷிங்டனிலுள்ள மைக்குரோ சொப்ட் நிறுவனத்தின் சர்வதேச தலைமையத்தில் பணியாற்றுவதற்கு ரமணன் திட்டமிட்டிருந்ததாகவும் ஆனால் அவர் கைதுசெய்யப்பட்டதால் அவரின் திட்டம் கைகூட வில்லையெனவும் ரமணனின் சகோதரர் ரகு தெரிவித் துள்ளார். (ந-5)

# புதுக்குடியிருப்பில் பலியானவர்களின் சடலங்கள் வைத்தியசாலையில்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புப் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் 4 சடலங்களும், இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் 4 பேரும் புதுக்குடியிருப்பு மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் உட்பட 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

காத்தான் துரைசாமி (வயது-61), துரைசாமி சின்னம்மா (வயது-55), அவர்களது மகளாகிய துரைசாமி தமிழினி (வயது-17) மற்றும் எஸ்.தவக்குமார் (வயது-17) ஆகியோரே இந்தச்சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கலாதீபன் மஞ்சு (வயது-26), கலாதீபன் திவ்வியா (வயது-25), நாராயணன் மாரியம்மா (வயது-60), சுப்பையா (வயது-62) ஆகியோரே காயமடைந்தவர்கள் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ந-5)

# வெளியிணைப்பு இயந்திரங்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட மீண்டும் அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாக்கடற்பரப்பில் வெளி யிணைப்பு இயந்திரங்களைப் பயன்படுத்தி மீன் பிடியில் ஈடுபட விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கக் கோரி, மீனவ சங்கப் பிரதி நிதிகளுக்கும் கடற்படை அதிகாரிகளுக்குமிடையே அண்மையில் இடம்பெற்ற சந்திப்பும் பலனளிக்கவில்லை.

மறுஅறிவித்தல் வரை வெளியிணைப்பு இயந்திரங் களைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதற்கான தடை தொடருமென இச்சந்திப்பில் தெரிவிக்கப்பட்டதாக மீனவ சங்கங்கள் தெரிவித்துள்ளன.

யாழ்.குடாக் கடற்பரப்பில் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக மீன்பிடித் தொழிலுக்கு பல கட்டுப்பாடுகள் விதிக் கப்பட்டு வந்தன. இரவு நேர மீன்பிடித் தடை, கடற் கரையிலி ருந்து மட்டுப்படுத்தப்பட்ட தூர எல்லையினுள் மட்டுமே மீன்பிடியில் ஈடுபட வேண்டுமென்ற நிபந்தனைக ளுக்கப்பால் வெளியிணைப்பு இயந்திரங் களைப் பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டிருந்தது. இதனால் கைகளால் துடுப்பு வலித்தே மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

எனினும், படையினரால் பூநகரி கைப்பற்றப்பட்ட தையடு த்து பகலில் கட்டுப்பாடுகள் ஏதுமி ன்றி மீன்பிடியில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டது. இதையடுத்து குருநகர், பாசையூர் மற்றும் கொழும்புத் துறை மீனவர்களது தொழில் இயல்பு நிலைக்குத் திரும்பியிருந்தது.

கடலுணவுப் பொருட்களினது விலையும் யாழ்ப்பாண சந்தையில் வீழ்ச்சியடைந்திருந்தது. இந் நிலையில் புத்தாண்டின் முதலாம் திகதி முதல் மீண்டும் வெளியிணைப்பு இயந்திரங்களைப் பயன்படுத்த அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதனால் அப் பகுதியில் மீன்பிடித் தொழில் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே மேற்படி வெளியிணைப்பு இயந்திரங் களினைப் பயன்படுத்துவதற்கான அனுமதி கோரி கடற்படை யினருக்கும் மீனவ சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையே பேச் சுக்கள் இடம்பெற்றன.

எனினும் அது குறிப்பிடக்கூடிய வெற்றியை அளிக் கவில்லை. வெளியிணைப்பு இயந்திரங்களைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்ட கால இடைவெளியில் மீனவர்கள் பெரும ளவில் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டுவந்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (6)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## தன்னம்பிக்கை



தன்னம்பிக்கை இலட்சியம் நமக்கு மிகப்பெரிய உதவியாகும். இந்தத் தன்னம்பிக்கை எங்கும் உபதேசிக்கப்பட்டு, செயல் முறையில் பின்பற்றப்படுமானால் நம்மிடையே உள்ள தீமைகளும் துயரங்களும் பெரும்பாலும் அழிந்துவிடும்.

மனித வரலாற்றை முழுவதும் பார்க்கும் போது எந்த ஆணோ பெண்ணோ வரலாற்றில் சிறப்புடன் விளங்கினார்கள் என்றால் அதற்கு மற்ற எல்லா வற்றையும் விட முக்கியகாரணம் அவர்களது தன்னம்பிக்கைதான். பிறந்ததிலிருந்தே நான் சிறப்படையப் போகிறேன் என்ற எண்ணத்துடன் அவர்கள் வாழ்ந்தார்கள், சிறந்தவர்கள் ஆனார்கள். எவ்வளவு முடியுமோ அவ்வளவுதாழ்ந்த நிலைக்கு ஒருவன் சென்றாலும் திடீரென ஒரு முரட்டுத் துணிச்சலுடன் மேலெழுந்துதன்னம்பிக்கையுடன் திகழும் நேரம் ஒன்று வந்தேதீரும் ஆரம்பத்திலேயே நாம் இதைத் தெரிந்து கொள்வது நல்லது.

# தெற்கிலுள்ள கொலையாளிகளை அரசினால் ஏன் ஒடுக்க முடியவில்லை

## முன்னாள் ஜனாதிபதி கேள்வி

(கொழும்பு)

சண்டே லீடர் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை, ஜனநாயகத்திற்கும் நாட்டின் சுதந்திரத்துக்கும் பாரிய அடியாகுமென முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க லசந்த விக்கிரமதுங்கவின் பூதவுடலுக்கு நேற்று முன்தினம் இரவு அஞ்சலி செலுத்தினார்.

இதன்போது அவர் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த இரண்டு வருடங்களில் வரலாற்றில் அதிகளவான ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதில் அதிகமான ஊடகவியலாளர்கள் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டுள்ளனர். ஏனையோர் மீது பழிபோடுவதைவிட நாட்டின் 12 வருடங்கள் அரசாங்கத்தை நடத்தியவர் என்ற அடிப்படையில் நாட்டு மக்களுக்கு பாதுகாப்பு வழங்கவேண்டியது அரசாங்கத்தின் கடமை.

அதைவிடுத்து நாடு படுகுழியில் விழுவதற்கு அரசாங்கம் இடமளித்துள்ளமை கவலையளிக்கிறது. அரசாங்கத்தால் விடுதலைப் புலிகளை ஒடுக்க முடியுமானால் தெற்கிலுள்ள கொலையாளிகள் சிலரை ஏன் ஒடுக்க முடியாதுள்ளது என கேள்வி எழுப்பினார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

கடந்த மூன்று வருடங்களில் தனது பாதுகாப்பும் பலவீனப்பட்டுள்ளதாகவும் கூறினார். (ந-5)

# மேஜர் ஜெனரல் சந்திரசிறிக்கு ஒரு வருடம் சேவை நீடிப்பு

யாழ்.மாவட்டத்தின் முன்னாள் இராணுவ கட்டளைத் தளபதியான மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் பதவிக்காலம் மேலும் ஒரு வருடம் நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளதாவது, யாழ்.மாவட்டத்தின் முன்னாள் கட்டளைத் தளபதியான மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் பதவிக்காலம் மேலும் ஒரு வருடம் நீடிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கடந்த மூன்று வருடங்களாக சிறப்பாக செயற்பட்டமைக்காக இந்த சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 7ஆம் திகதியுடன் அவர் ஓய்வு பெறுகிறார். பதவி நீடிப்பு செய்யப்பட்ட ஜி.ஏ. சந்திரசிறி இராணுவத் தலைமையகத்தின் முதன்மை அதிகாரியாக நியமிக்கப்படவுள்ளார்.

இதனிடையே பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு அதிகாரியாக பணியாற்றி வந்த பிரிகேடியர் பிரசாத் சமரசிங்கவின் பதவிக்காலம் நிறைவடைவதால் அவரது இடத்திற்கு சிறப்பு படை பிரிகேட்டின் கட்டளை அதிகாரியாக பணியாற்றிவரும் பிரிகேடியர் நிர்மல் தர்மரட்ன நியமிக்கப்படவுள்ளார்.

சிறப்புப்படையின் கட்டளை அதிகாரியாக கேணல் அதுல கொட்டிபிலி நியமிக்கப்படவுள்ளதாக இராணுவ தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது. (ந-5)

## முல்லைத்தீவு பகுதியை...

ஆகிய 4 பிரதேசங்களுக்குள் புலிகள் முடக்கப்பட்டுள்ளனர். படையினர் முன்னேற்ற முயற்சிகளை முறியடிக்கும் வகையில் புலிகள் பதில் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். ஆனாலும் படையினர் அதனை முறியடித்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் பகுதிமீது நேற்று விமானப்படையினரது குண்டுவீச்சு விமானங்கள் இருதடவைகள் குண்டுவீச்சினை நடத்தியுள்ளனர்.

இது தொடர்பில் இராணுவப் பேச்சாளர் மேலும் கூறியதாவது,

இராணுவத்தின் 9 படை அணிகள் முல்லைத்தீவு பிரதேசத்தை சுற்றிவளைத்தவாறு தீவிர முன்னகர்வு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனையிறவுப் பிரதேசம் படையினரின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டதையடுத்து விடுதலைப்புலி உறுப்பினர்கள் முல்லைத்தீவுக்குள் முடக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்தின் 57,58 மற்றும் 59 ஆவது படையணிகளும் முதலாவது இரண்டாவது மூன்றாவது மற்றும் நான்காவது விசேட படையணிகள் போன்றனவும் தற்போது முல்லைத்தீவை சுற்றி வளைத்துள்ளன.

அத்துடன் முகமாலை மற்றும் கிளாலிப் பிரதேசங்களைக் கைப்பற்றி முன்னேறி வரும் 53 ஆவது மற்றும் 55 ஆவது படையணியினர் அவர்களுடன் இணைந்து கடும் தாக்குதலை மேற்கொண்டவாறு முன்னேறி வருகின்றனர். (ந-5)

## லசந்த விக்கிரமதுங்கவின் இறுதிச் சடங்கு இன்று

சண்டே லீடர் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் இறுதிச் சடங்கு இன்று திங்கட்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பத்தரமுல்ல றொபேர்ட் குணவர்த்தன மாவத்தையிலுள்ள அவரது வீட்டிலிருந்து பூதவுடல் இன்று நண்பகல் 12 மணிக்கு எடுத்துவரப்பட்டு நாரஹேன்பிட்டிய கிரிமண்டல மாவத்தையிலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் இறுதி ஆராதனைகள் நடைபெறும்.

அதன் பின்னர் பிற்பகல் 2 மணிக்கு லசந்தவின் பூதவுடல் ஊர்வலமாக பேஸ்லைன் வீதியூடாக கனத்தை மயானத்துக்கு எடுத்துவரப்படும்.

லசந்தவுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்கும் இந்தப் படுகொலையைக் கண்டிப்பதற்கும் இந்த ஊர்வலத்தில் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையை உள்நாட்டு வெளிநாட்டு ஊடக அமைப்புகள், ஊடகவியலாளர்கள், பொது அமைப்புகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் அனைவரும் வன்மையாகக் கண்டித்துள்ளனர். (ந-5)

## நெடுந்தீவில் சடலம் கரை ஒதுங்கியது

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் நேற்று முன்தினம் ஆண் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கிய நிலையில் ஊர்காவற்றுறைப் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

கரை ஒதுங்கிய சடலத்துடன் இதுவரை யாழ்.குடாநாட்டில் மொத்தமாக 7 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. எனினும் சடலங்கள் அனைத்தும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் கடந்த 31-ம் திகதி வடமராட்சியில் மீட்கப்பட்ட 2 சடலங்களும் கடந்த வியாழக்கிழமை காங்கேசன்துறையில் மீட்கப்பட்ட 4 சடலங்களும் அடங்குகின்றன. இதுவரை எந்தச் சடலமும் அடையாளம் காணப்படவில்லை என வைத்தியசாலை தரப்புகள் தெரிவித்துள்ளன. (ந-5)

## யாழ்.குடாநாடு முழுவதும்...

தினத்தில் கிளிநொச்சிக்கு வடக்கே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பரந்தன் சந்தியை கைப்பற்றிய படையினர் தொடர்ந்து 2ஆம் திகதி கிளிநொச்சியையும் அதனைத் தொடர்ந்து முகமாலை, பளை, சோரன்பற்று பிரதேசங்களைக் கைப்பற்றி 9ஆம் திகதி ஆனையிறவை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர்.

இதனைத் தொடர்ந்து புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் எஞ்சியிருந்த குடாநாட்டின் வடமராட்சிக் கிழக்குப் பிரதேசங்களான நாகர் கோவில் செம்பியன்பற்று, வெற்றிலைக்கேணி உள்ளிட்ட பிரதேசங்களை நேற்று முன்தினம் சனிக்கிழமை படையினர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததாக அறிவித்தனர்.

இதன் மூலம் யாழ்.குடாநாடு தற்போது படையினரின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

தற்போது யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்கள் முழுமையாகவும் கிளிநொச்சி மாவட்டத்தின் பெரும் பகுதியையும் முல்லைத்தீவு மாவட்டத்தின் அரைவாசிக்கு மேற்பட்ட பகுதிகளையும் படையினர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சக வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (ந-5)

## கிளிநொச்சியை அபிவிருத்...

கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி ஆகியோருடன் அத்தியாவசிய சேவைகள் திணைக்கள ஆணையாளர் எஸ்.பி.திவாரட்ண மற்றும் கிளிநொச்சி அரசாங்க அதிபர் என்.வேதநாயகம், முல்லைத்தீவு அரசாங்க அதிபர் எமில்டா சுகுமார், வவுனியா அரசாங்க அதிபர் பி.எஸ்.எம்.சாள்ஸ் உட்பட சுகாதார, அபிவிருத்தி, கல்வி, வீடமைப்பு திணைக்கள அதிகாரிகளும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத் இந்தக் கலந்துரையாடலுக்கு பார்வையாளராக அழைக்கப்பட்டிருந்தார்.

பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டதும் அரசாங்க அதிகாரிகள் குழுவொன்று அடுத்த வாரம் கிளிநொச்சிக்குச் சென்று அங்கு அவசரமாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயும் என்று மீள் குடியேற்ற அமைச்சின் செயலாளர் ஏ.சி.எம். ரசாக் தெரிவித்தார்.

இந்தப் பிரதேசங்களுக்கு மக்களை மீண்டும் வரவழைப்பதே இத்திட்டத்தின் நோக்கம் என்று தெரிவித்த அவர் வீதிகள், பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலை வசதிகளை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று கூறினார்.

இதேவேளை வன்னியின் பல்வேறு பகுதிகளிலிருந்து இதுவரை ஆயிரத்து 500 பேர் வவுனியாவை வந்தடைந்திருப்பதாகத் தெரிவித்த வவுனியா அரசாங்க அதிபர் சாள்ஸ், இவர்களில் பலர் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருப்பதாகவும் 100 குடும்பங்கள் மனிக்பாம் பகுதியில் அமைக்கப்பட்ட நிரந்தர வீடுகளுக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் கூறினார். (ந-5)

## கடந்த மூன்று மாதங்...

தெரிவித்துள்ளதாவது,

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் இருந்து 3 மாதகாலப்பகுதியில் 3 ஆயிரம் படையினர் வன்னிக்களமுனைகளில் கொல்லப்பட்டுள்ளனர்.

இக்காலப்பகுதியில் 15 ஆயிரம் படையினர் கொல்லப்பட்டதாக எதிர்க்கட்சியினர் தெரிவிப்பது தவறானது. விடுதலைப்புலிகள் முல்லைத்தீவுப் பகுதியில் மட்டுமே தற்போது நிலைகொண்டுள்ளனர்.

அவர்கள் வசம் 2 ஆயிரம் பேரே உள்ளனர். எனவே அவர்களை நாம் இலகுவில் வெற்றி காண்போம் என்றார் அவர்.

இதேவேளை இலங்கை அரசு வன்னியில் மேற்கொண்டு வரும் படைநடவடிக்கையின் தொடக்க காலத்தில் இருந்து கடந்த ஆண்டின் இறுதிப் பகுதிவரையிலுமான காலப் பகுதியில் ஏறத்தாழ 10 ஆயிரம் படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 25 ஆயிரம்பேர் காயமடைந்துள்ளதாகவும் மேலும் 25 ஆயிரம் பேர் படைகளிலிருந்து தப்பியோடியுள்ளதாகவும் அண்மையில் கொழும்புத் தகவல்களை ஆதாரம்காட்டி செய்திகள் வெளிவந்திருந்தன.

தற்போதைய 3 மாதங்களில் 3 ஆயிரம் படையினர் கொல்லப்பட்டதானது இந்த தகவல்களை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது என படைத்துறை அவதானிகள் தெரிவித்துள்ளனர். (ந-5)

## சர்வகட்சிக்...

கொண்டுவரப்படும் எனவும் அதன் பின்னர் வடக்கின் ஜனநாயகத்தை நிலை நாட்ட சர்வகட்சிக்குழுவின் பரிந்துரைகள் பெரிதும் உதவியாக அமையுமெனவும் சுட்டிகாட்டப்பட்டுள்ளது.

இதன்படி சர்வகட்சிக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த அரசியல் சாசனத்தில் சில திருத்தங்களை மேற்கொள்ள சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (ந-5)


YOGI'S BEAUTY

The Academy of Beauty Therapy, Hair Dressing & Home Science

குறுகிய கால புதிய பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன

1.அழகுக் கலை பயிற்சிகள் (Beauty Culture- Facial Classes)
2.ஒப்பனை, தலை அலங்காரங்கள் (Bridal Make- up and Hair Styles)
3.மேலைத்தேய ஐசிங் அலங்காரங்கள் (Fondant Icing & Sugar Art on fondant Strctures)
4.கேக் ஐசிங், மாச்சீனி மலர்கள் (Cake Icing and sugar flowers)
5.நவீன முறையில் 5 விதமான சாறிபிளவுஸ் கட்டிங்கள் (Latest Saree Blouse cuttings)

ஆரம்பம் :-
17.01.2009 காலை 10 மணி

பயிற்சிகள் முடிவில் Diploma சான்றிதழ்கள் வழங்கப்படும்.
ஆர்வம் உள்ளோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

MRS. YOGINI SHANMUGANATHAN
Diploma in Aesthetics & Cosmetology(India)
Diploma in Advanced Bridal Make -up & Character make-up (India)
Diploma in Home Economics (India and SriLanka)

T.Phone:- 021 2222796
0602210077
0777164923
0712510025

75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன்கோவில் முன்பாக)

(C-1981)


## இலங்கை அரசாங்கம்...

வத்திக்கானில் உள்ள கத்தோலிக்க திருச்சபையின் தலைமையகத்தில் இருந்து இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை கருத்து வெளியிட்ட போதே பரிசுத்த பாப்பரசர் 16ஆவது பெனடிக் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையில் போர் நிறுத்தப்பட்டு தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என கத்தோலிக்க திருச்சபையின் பரிசுத்த பாப்பரசர் 16ஆவது பெனடிக் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

போரினால் பொதுமக்கள் கொல்லப்படுவதனையிட்டும் அவர் கவலையும் வேதனையும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் போரை நிறுத்தி உடனடியாக சமாதானப் பேச்சை தொடங்க வேண்டும் என வலியுறுத்தியுள்ள அவர் கூடிய விரைவில் சமாதானம் ஏற்படும் என தான் நம்புவதாகவும் தெரிவித்தார். (ந-5)


இன்று ஆரம்பம்
A/L Day Class
(வர்த்தகப் பிரிவு)
காலை 9.00 மணி
DMI நாவலர் வீதி, யாழ்.


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.